www.padippakam.com

1 - 15 ஆகஸ்டு 99 ரூ. 4.00

# புதிய ஜனநாயகம்



கார்கில் போர்: வெற்றி அமெரிக்க வல்லரசுக்கே!




படிப்பகம்

www.padippakam.com

# துரோகத் தொழிற்சங்கங்கள் புறக்கணிப்பு

## அம்பை ''மதுரா கோட்ஸ்'' பஞ்சாலைத் தொழிலாளர்கள் கொடுத்த நெத்தியடி

தமிழகத்தில் மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம் ஆகிய மூன்று இடங்களில் இயங்கி வரும் ''மதுரா கோட்ஸ்'', அந்நிய முதலீட்டை பெருமளவு கொண்ட பஞ்சாலை நிறுவனமாகும். தமிழகம் தவிர்த்து, மதுரா கோட்ஸ் நிறுவனத்திற்கு, கேரளாவில் கொராட்டியிலும், குஜராத் மாநிலத்தில் பனோலியிலும் பஞ்சாலைகள் உண்டு.

பத்தாண்டுகளுக்கு முன்பு மதுரா கோட்ஸ்-இன் தமிழக பஞ்சாலைகளில் மட்டும் ஏறத்தாழ 25,000 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர். ஆனால், தற்பொழுது இம்மூன்று ஆலைகளிலும் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 9,000 ஆக குறைக்கப்பட்டுவிட்டது. கடந்த பத்தாண்டுகளில், ஆலையை நவீனப்படுத்துவது என்ற பெயரில் பாதிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், எந்தவொரு எதிர்ப்புமின்றி, நிர்வாகத்தில் வேலையில் இருந்து தூக்கியெறியப்பட்டுவிட்டனர்.

இந்த மூன்று ஆலைகளிலும் இயங்கி வரும் ஓட்டுக் கட்சிகளின் தலைமையில் உள்ள தொழிற்சங்கங்கள், நிர்வாகத்தின் எடுபிடிகளாய், ஐந்தாம் படைகளாய் இருந்து வருவதால், மதுரா கோட்ஸ் நிர்வாகம், தனது தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை இதுநாள் வரை எளிதாக நடைமுறைப்படுத்தி வந்தது. ஆனால், ஊதிய உயர்வு தொடர்பாக மதுரா கோட்ஸ் பஞ்சாலைத் தொழிலாளர்கள் தன்னெழுச்சியாய் நடத்திவரும் போராட்டங்கள், நிர்வாகத்தின் தொழிலாளர் விரோதப் போக்கையும், ஓட்டுக் கட்சி தொழிற்சங்கங்களின் துரோகத்தையும் முறியடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை முன்னறிவிப்பதாக அமைந்துள்ளன.

★☆★

கோட்ஸ் நிறுவனத்தில் செயல்படும் ஓட்டுக் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து, நிர்வாகத்திடம் புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தம் போட்டுக் கொள்வதற்காக, தொழிற்சங்கக் கூட்டுக் குழுவை அமைத்து, இருபது அம்சக் கோரிக்கையை முன் வைத்தன. ஊதிய உயர்வாக ரூ. 1500/- தர வேண்டும் என்பதுதான் இக்கோரிக்கைகளுள் முதன்மையானது.

பழைய ஊதிய உயர்வு ஒப்பந்தம் 31.6.98 அன்றே காலாவதியாகிப் போன பின்னும், நிர்வாகம் உடனடியாகப் பேச்சு வார்த்தையைத் தொடங்காமல் இழுத்தடித்து, 10.2.99-இல்தான் மதுரையில் பேச்சு வார்த்தையைத் தொடங்கியது. நிர்வாகத்தின் இந்த இழுத்தடிப்புக்கு தொழிற்சங்கக் கூட்டுக் குழுவும் ஒத்து ஊதி வந்தது. பேச்சு வார்த்தையும் உடனடியாக முடிவுக்கு வராமல் இழுத்துக் கொண்டே போனதால், தொழிலாளர்கள் வெறுப்பும், ஆத்திரமும் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் 17.4.99 அன்று நடந்த பேச்சு வார்த்தையின்பொழுது, நூற்றைம்பது ரூபாய்தான் ஊதிய உயர்வாகத் தர முடியும் என நிர்வாகம் அடாவடித்தனமாக அறிவித்தவுடன், தூத்துக்குடியிலும், அம்பாசமுத்திரத்திலும் தொழிலாளர்கள் தன்னிச்சையாக உற்பத்திக் குறைப்பு போராட்டத்தைத் தொடங்கினர்; மதுரையில் நியாயமான ஊதிய உயர்வு கோரி 1.6.99 முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். நிர்வாகத்தை அடிபணிய வைப்பதற்காக தொழிலாளர்கள் தொடங்கிய இந்த நியாயமான போராட்டத்தை தொழிற்சங்கங்கள் ஆதரிக்காததோடு, நிர்வாகத்துடன் கை கோர்த்துக் கொண்டு போராட்டத்தைக் கைவிடுமாறு தொழிலாளர்களை எச்சரித்தன. துரோகிகளின் இந்த எச்சரிக்கையை தொழிலாளர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை.

அம்பாசமுத்திரம் கிளையில் நடந்த போராட்டத்தின்பொழுது, சில முன்னோடித் தொழிலாளர்கள், நிர்வாகத்தின் - தொழிற்சங்கங்களின் தொழிலாளர் விரோதப் போக்கை அம்பலப்படுத்தி, துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். நிலைமை கைமீறிப் போய்விட்டதை உணர்ந்த தொழிற்சங்கங்கள், நிர்வாகத்தைத் தூண்டிவிட்டு, ஐந்து முன்னணித் தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கச் செய்தது. தொழிற்சங்கங்களின் இந்தச் சதியையும், சீர்குலைவு வேலையையும்



புரிந்து கொண்ட தொழிலாளர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தி, சட்ட விரோத பணி நீக்கத்தை நிர்வாகம் திரும்பப் பெற வைத்தனர்.

''ஒற்றுமையாகச் சமரசமின்றிப் போராடினால் நமது கோரிக்கைகளை வென்றெடுக்கலாம்'' என்ற படிப்பினையை இப்போராட்டத்தின் மூலம் புரிந்து கொண்ட அம்பாசமுத்திரம் கிளைத் தொழிலாளர்கள் துரோகத் தொழிற்சங்கங்களை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டு, புதிய தொழிற்சங்கமொன்றைக் கட்டியமைத்துள்ளனர். 4,000 தொழிலாளர்களுள் 3,500 தொழிலாளர்கள் இப் புதிய சங்கத்தின் பின் அணி திரண்டு நிற்பதால், இப்புதிய தொழிற்சங்கத்தையும் ஊதிய உயர்வுப் பேச்சு வார்த்தையில் சேர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயமும் உருவாகிவிட்டது.

'மார்க்சிஸ்டு'களின் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம், தொழிலாளர்கள் தம் பின்னே அணி திரளவில்லையே என்ற ஆதங்கத்தில் அறிவிழந்து, ''உலகத் தொழிலாளர்களுக்கே தீனி போட்ட நாங்கள், அம்பை தொழிலாளர்களுக்கும் தீனி போட முடியாதா?'' என வக்கிரமாக தட்டியில் எழுதி வைத்து, தங்களின் சில்லரை புத்தியைக் காட்டிக் கொண்டனர். மூக்கறுபட்டுப் போன துரோகத் தொழிற்சங்கங்கள், ஊதியப் பேச்சு வார்த்தையை இழுத்தடிப்பதன் மூலம், புதிய தொழிற்சங்கத்தை முளையிலேயே கிள்ளியெறிந்துவிடத் திட்டம் போடுகின்றன. வர்க்க உணர்வோடு ஒன்றுபட்டு போராடிக் கொண்டிருக்கும் தொழிலாளர்கள், தங்களின் ஒற்றுமையைக் கட்டி காப்பதற்கு, புரட்சிகர அரசியல் உணர்வைப் பெறுவதும், புரட்சிகர தொழிற்சங்கத்தோடு கைகோர்த்துக் கொள்வதும் அவசியமானதாகும்!

தகவல்:
தொழிலாளர் பிரச்சாரக் குழு,
விக்கிரமசிங்கபுரம்.

### தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த 16-31 மே 99 புதிய ஜனநாயகம் இதழில் (இதழ் எண்: 11-13) வெளியான ''டி.வி.எஸ். நிர்வாகத்தின் காட்டு தர்பார்'' என்ற செய்திக் கட்டுரையில், ''*மறைந்த* வலது கம்யூனிஸ்ட் தலைவரான கே.டி.கே. தங்கமணி'' என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது கவனக் குறைவால் நேர்ந்துவிட்ட இத்தவறுக்கு சுயவிமர்சனம் ஏற்கிறோம்.

— ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 14

**இதழ்: 16 - 18**

1 ஜூலை'99 - 15 ஆக.'99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# நெல்லைப் படுகொலையும் கருணாநிதியின் கிரிமினல் மூளையும்

**மா**ஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைக்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக் கொடுக்கப் போன பேரணியினர் மீது கொலை வெறிபிடித்த கூலிப்படையாக மாறித் தாக்குதல் நடத்தியிருக்கிறது, நெல்லையில் குவிக்கப்பட்ட போலீசு அதிரடிப்படை. புதிய தமிழகம் கட்சி கிருஷ்ணசாமி, த.மா.கா.வின் சோ. பாலகிருஷ்ணன், மற்றும் போலி கம்யூனிஸ்டு கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் போன பேரணியை வழிமறித்து, எவ்வித முகாந்திரமுமின்றி தலைவர்களைக் குறிவைத்து கல்வீச்சில் ஈடுபட்டது, போலீசு அதிரடிப்படை. முதலில் சி.பி.எம். செயலாளரின் மண்டையை உடைத்தது. தலைவர்களுக்கு அரணாக வாகனத்தின் மீது கவிழ்ந்து கொண்டு போலீசின் கல்லடியைத் தொண்டர்கள் தாங்கிக் கொண்டிராவிட்டால், குறிப்பாக கிருஷ்ணசாமி கொல்லப்பட்டிருப்பார். வானை நோக்கிச் சுட்ட போலீசு அதிரடிப்படை, பேரணியினர் மீது கண்ணீர்ப் புகை, குண்டு வீச்சு, தடியடி, கல்வீச்சு நடத்தி நெல்லை தாமிரபரணி ஆற்றில் தள்ளி, மிருகத்தனமாகப் படுகொலைகளைச் செய்திருக்கிறது. ஆற்றுக்குள் தள்ளப்பட்டவர்களை விடாது அடித்து நொறுக்கும்படி உயர் போலீசு அதிகாரி உத்திரவிட்டிருக்கிறார். கரையேற முயன்ற பெண்கள், முதியவர்களை விடாது தாக்கி ஆற்றுக்குள் தள்ளியதோடு, வெளியே வீசப்பட்ட இரண்டு வயதுக் குழந்தையையும் மீண்டும் ஆற்றுக்குள் தூக்கி வீசியிருக்கிறான் ஒரு போலீசு வெறிநாய். அதைப் படம் பிடித்த தினமணி நிருபரை அடித்து மிதித்து, காமிராவையும் உடைத்ததோடு, ஆற்றில் தத்தளித்த பெண்களைக் காப்பாற்ற முயன்ற நிருபர்களை மிரட்டி விரட்டியிருக்கிறது, போலீசு அதிரடிப்படை.

இத்தனைக்கும் பிறகு, ''இந்தச் சாவுகளுக்கு போலீசு நடவடிக்கை எவ்விதத்திலும் காரணமில்லை. பிரேதப் பரிசோதனையின்போது போலீசு உயர் அதிகாரிகள் உடன் இருந்ததில் தவறில்லை. இச்சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் எனக் கூறப்படும் மாவட்ட அதிகாரிகள், போலீசை இடமாற்றம் கூட செய்ய முடியாது'' என்று திமிராகப் பேசியிருக்கிறார் மாநில சட்ட அமைச்சர் ஆலடி அருணா. உடனடியாக மாவட்ட நீதிபதி தலைமையில் விசாரணை கமிசன் போட்ட கருணாநிதி, மூப்பனாரின் கோரிக்கையை ஏற்று, உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதியை விசாரணை அதிகாரியாக மாற்றியிருக்கிறார். கமிசன் அமைத்த கையோடு கருணாநிதியும் ஆலடி அருணாவும் பேசியிருப்பவை நெல்லைப் படுகொலையை அப்பட்டமாக நியாயப்படுத்துபவை. ''பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு சுமூக சூழ்நிலை திரும்புவதை விரும்பாத தொழிலாளர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குள் நுழைய முயன்று, அதைத் தடுத்த காவல் துறையினர் மீது கல்வீசித் தாக்குதலில் ஈடுபட்டனர்,'' என்கிறார் கருணாநிதி. பேரணியினரைக் காவலர்கள் கலைக்க முயன்றபோது ஆற்றில் விழுந்த சிலர் இறந்தனர் என்கிறார். பத்தாம் பசலியாக மாறி, அகிம்சாமூர்த்தியைப் போல நாடகமாடி, மாஞ்சோலைத் தொழிலாளர் போராட்டத்துக்குச் சாதிச் சாயம் பூசியிருக்கிறார்.

''வன்முறை, அடிதடி, அமளி, ரகளை, அரிவாள், வேல் கம்பு, கத்தி வீச்சு, கல்லெறி — இந்த விஷ விளையாட்டுகளுக்கு சாதி வெறியைப் பிரதானமாகப் பயன்படுத்தி, தங்களைப் பெரும் புரட்சிப் புலிகளாகத் தோற்றம் காட்டிக் கொள்ள சில சமூக விரோதிகள் நாட்டில் தலையெடுக்க முனைகிறார்கள். இத்தகைய வக்கிரமான செயல்களுக்கு அரசியல் சாயம் போர்த்திக் கொண்டு நாடகமாடுகிறார்கள். இதைத் தெரிந்து கொண்டவர்கள்கூட சில சமயத்தில், இது போன்றவர்களின் சூழ்ச்சிக்குப் பலியாவது வேதனை அளிக்கிறது. சாதியின் பெயராலோ, மதத்தின் பெயராலோ மட்டுமின்றி, அரசியலின் பெயராலோ அல்லது தொழிலாளர் கிளர்ச்சி என்ற பெயராலோ இத்தகைய வன்முறை எங்கும் எப்போதும் நடைபெறுவதை ஆதரிக்கக் கூடாது'' என்றார் கருணாநிதி.

போலீசு வன்முறைக் கும்பலின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் கருணாநிதி தான் சாதிவெறியைத் தூண்டுபவராகவும் செயல்பட்டிருக்கிறார். நெல்லைப் படுகொலைக்குக் காரணமான போலீசு உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சியரை மாற்றும்படி கோரினால், ''நெல்லை மாவட்ட ஆட்சியர் கி. தனவேலுவை இடம் மாற்றம் செய்தால், மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியினர் அதற்கு எதிராகக் கோஷம் போடுவார்கள்'' என்று பதிலளிக்கிறார், கருணாநிதி. சாதி, மதம், அரசியலை வைத்து சுயநலனுக்காக வன்முறையைத் தூண்டுவதை எதிர்த்து, மேற்குறிப்பிட்டவாறு வக்கணை பேசிய கருணாநிதிதான், அரசு நிர்வாகப் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் குற்றமிழைத்தால் நடவடிக்கை எடுக்கக் கூடாது; சாதிக்கலவரம் வரும் என்று மிரட்டுகிறார். வழக்கம்போல இறந்தவருக்கு நிவாரண நிதி, விசாரணை கமிசன் என்று ஒட்டுப் பொறுக்கும் நாடகமாடத் துவங்கிவிட்டார்.

போலீசு நிலையக் கொட்டடிக் கொலையோ, வாச்சாத்தி - சின்னாம்பதி போன்ற பெருந்திரள் கற்பழிப்போ, எந்தவொரு கிரிமினல் குற்றமானாலும் அதற்கு வக்காலத்து வாங்கி, அதிகாரிகள் - போலீசைக் காப்பாற்றுவதே ஆட்சியாளர்களின் வாடிக்கையாகி

தொடர்ச்சி 13-ஆம் பக்கம்

www.padippakam.com

# கார்கில் போர்: வெற்றி அமெரிக்காவுக்கே!

**''காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாம் தரப்பை அனுமதிக்க மாட்டோம்'' என மைய அரசு கூறிவந்ததற்கு மாறாக, கார்கில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில், பாகிஸ்தானைப் போலவே, இந்தியாவும் அமெரிக்காவிடம் சரணடைந்தது.**

''ஆபரேஷன் வெற்றி, நோயாளி மரணம்'' என்றொரு பிரபலமான ஆங்கிலச் சொற்றொடர் உண்டு. இந்தியாவின் கார்கில் போரும் இப்படித்தான் முடிந்தது. இதற்குப் பொருத்தமாகத்தான் கார்கில் போருக்கு இந்திய அரசு சூட்டியுள்ள ''ஆபரேஷன் விஜய்'' (வெற்றி நடவடிக்கை) என்கிற பெயரும் அமைந்துள்ளது.

கட்டுப்பாட்டு எல்லையை இந்திய இராணுவம் எட்டிப் பிடிப்பதுதான் ''வெற்றி நடவடிக்கை''யின் இலக்கு என்றால், அதில் இந்திய இராணுவம் வெற்றி பெற்றுவிட்டது என்று ஒப்புக் கொள்ளலாம். மற்றபடி, ''எல்லையைத் தாண்டி ஆக்கிரமிப்பு நடத்திய பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் அனைவரையும் வெளியேற்றுவதில்'' கூட இந்திய இராணுவம் இன்னும் முழுமையாக வெற்றி ஈட்டமுடியவில்லை.

''ஊடுருவல்காரர்களை இந்திய இராணுவம் வெளியேற்றவில்லை; முன்னேறிக் கொண்டிருந்தது; பாகிஸ்தான் அரசின் வேண்டுகோளை ஏற்று அவர்களாகவே விலகிக் கொண்டார்கள்'' என்பதற்காக இதைச் சொல்லவில்லை. இன்னமும் ''பாக். ஊடுருவல்காரர்கள்'' கட்டுப்பாட்டு எல்லைக்கு இந்தப் பக்கம் பல இடங்களில் நிலை கொண்டிருக்கிறார்கள் என்பதால் சொல்கிறோம். ''கட்டுப்பாட்டு எல்லையை இந்திய இராணுவம் தொட்டுவிட்டது'' என்பது வரை வெற்றி பெற்றுவிட்டது. ''கடைசி ஊடுருவல்காரன் இருக்கும் வரை போரிடுவோம்; போரை நிறுத்தமாட்டோம். ஊடுருவல்காரர்கள் பாதுகாப்பாகத் திரும்பிப் போக அனுமதிக்க மாட்டோம்; சுற்றி வளைத்து நிர்மூலமாக்குவோம்'' என்றெல்லாம் ஆட்சியாளர்கள் அடித்த சவடாலெல்லாம் காற்றில் பறந்து போய்விட்டன.

கார்கில் போர் என்கிற தலைவலி திருகு வலியாகி விட்டது என்பதுதான் உண்மை. உளவுத்துறை பணி, இராணுவம், அரசியல், அரசு தந்திரம் என்று பல முனைகளிலும் இந்திய அரசு தோற்றுப் போய்விட்டது. இவ்வளவு நாளும் 'தேச' பக்தி பஜனை பாடிக் கொண்டிருந்த பிரபல ஆங்கிலப் பத்திரிகைகள்கூட கார்கில் போர் பற்றிய மறுமதிப்பீட்டின் முடிவாக, இந்தப் பலமுனைத் தோல்வியையே தொகுத்தளிக்கின்றன.

அப்படியானால், கார்கில் போர் பாகிஸ்தானுக்கு வெற்றியா? இது, பாகிஸ்தானுக்கு வெற்றியுமில்லை, முழுமையான தோல்வியும் இல்லை. எல்லைக் கோட்டைத் தாண்டிவந்து ''ஆக்கிரமித்த'' பகுதிகளை நிரந்தரமாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது பாகிஸ்தானின் இலக்காக இருந்திருக்குமானால், அதற்குத் தோல்வி ஏற்பட்டிருப்பதாகக் கருத முடியும். ஆனால், அது பாகிஸ்தானின் இலக்கு இல்லை. அதற்கு மாறாக, பாகிஸ்தான் வேறுபிற இராணுவ, அரசியல், அரசு தந்திரத்துறைகளிலான காரியங்களை கார்கில் போர் மூலம் சாதித்துக் கொள்ள விரும்பியது. அவற்றில் கணிசமான அளவு வெற்றியும் பெற்றுள்ளது. இந்திய 'தேச'பக்தி வெறி அல்லது போதையில் மதிமயங்கிக் கிடப்பவர்கள்தாம் இந்த உண்மைகளைக் காண முடியாது.

ஆனால், இதைவிடப் பெரிய உண்மை என்னவென்றால், கத்தியின்றி, இரத்தமின்றி, விமானக் குண்டு வீச்சோ, பீரங்கிச் சூடோ, ஆள் இழப்போ இல்லாமல் கார்கில் போரில் குதித்து வெற்றியைப் பறித்துக் கொண்டு போய்விட்டது அமெரிக்க மேல்நிலை வல்லரசு! வளைகுடாப் போரிலோ, பால்கன் போரிலோ தனது இலக்கை ஈடேற்ற முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் அமெரிக்க மேல்நிலை வல்லரசு, கார்கில் போரில் மிக எளிதானதொரு வெற்றியை ஈட்டிவிட்டது.

நமது நாட்டை ''தேசபக்தி'' என்கிற காய்ச்சல் நோய் தாக்கி இருக்கிறது. காய்ச்சலில் பலவகை இருப்பதைப் போல மூன்று வகை ''தேசபக்தி''கள் உண்டு.

ஒன்று ''ஆளும் தரப்பு தேசபக்தி''! இது, நாட்டுக்கும் மக்களுக்கும் எது அவசியமானதோ, சரியானதோ அதை அடிப்படையாகக் கொண்டதில்லை. நாட்டுக்கும் மக்களுக்கும் விரோதமானவற்றையெல்லாம், ''தேசபக்தி'' சாயம் பூசி ஆதாயம் அடையும் வகை.

இன்னொன்று, 'எதிர்த்தரப்பு தேசபக்தி'. அண்டை நாடுகள் மீது அநீதியான, ஆக்கிரமிப்பு போர் தொடுத்தால்கூட, ஆளும் தரப்பு தேசிய நலன்களில் சமரசம் செய்துவிட்டதாகக் குறைகூறி, மேலும் மேலும் தேசிய வெறியூட்டுவதுதான் எதிர்த்தரப்பு தேசபக்தி.

மற்றொன்று, பாமரத்தனமான தேசபக்தி. ஆளும்தரப்போ எதிர்த்தரப்போ, அதைப் பற்றிக் கவலையில்லை. அதிகாரபூர்வ அரசுப் பிரச்சாரம் எதுவோ, அதை அப்படியே ஏற்று ஆதரிப்பது.

இந்த மூன்றுவகை தேசபக்திக்காரர்களுமே, பிரச்சினையின் மூலத்தை, அடிப்படையை மூடிமறைக்கின்றனர் அல்லது காணத் தவறுகின்றனர். பாகிஸ்தான் நாடே, வந்தேறிகளான முஸ்லீம்களும் ஆங்கிலேயர்களும் சதி செய்து இந்தியாவைக் கூறு போட்டதால் உருவானது; நேருவும் - காந்தியும், காங்கிரசும், கம்யூனிஸ்டுகளும் இதற்குத் துணை போய் துரோகம் செய்தார்கள். இந்தியாவுக்கு எதிராக எப்போதும் ஆக்கிரமிப்பு சதி - நாசவேலைகளையே செய்து வரும் முஸ்லீம் பாகிஸ்தான், காஷ்மீரையும் கைப்பற்றிக் கொள்ளக் கூலிப்படையை ஏவி இந்தியாவின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து விட்டது. அதிகபட்ச இராணுவத்தை அனுப்பி பாகிஸ்தான் மீது படையெடுத்து, அதன் இராணுவ நிலைகளை அழித்தொழித்தால் மட்டுமே அடங்கும் என்பதுதான் ஆளும் தரப்பின் நிலை. அமைதிப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டே பாக். ஆக்கிரமிப்பு துரோகம் செய்துவிட்டது. அதை முறியடித்து இமாலய வெற்றி ஈட்டிவிட்டோம். உலக அளவில் பாகிஸ்தான் தனிமைப்பட்டு விட்டது. இந்திய நலன்களும் எல்லைகளும் பாதுகாப்பாக இருக்கின்றன என்று ஆளும் தரப்பு நம்பச் சொல்லுகிறது.

பாகிஸ்தான் பிரிவினையில் காந்தி - நேரு தலைமையிலான காங்கிரசு மற்றும் கம்யூனிஸ்டுகளின் துரோகம் என்கிற குற்றச்சாட்டை மறுப்பதைத் தவிர, காங்கிரசு மற்றும் போலி கம்யூனிஸ்டுகள் அடங்கிய எதிர்த்தரப்பின் நிலைப்பாட்டில் பெரும் வேறுபாடு எதுவும் கிடையாது. மற்றபடி, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். அரசின் போக்ரான்-II குண்டு வெடிப்பு, லாகூர் பேருந்துப் பயணம் - பேச்சு வார்த்தை உட்பட அதன் அரசு தந்திர அணுகுமுறைத் தவறுகள் காரணமாக காஷ்மீர் பிரச்சினையைச் சர்வதேசப் பிரச்சினையாக்குவதற்கும், உலக அளவில் இந்தியா தனிமைப்படவும் காரணமாக அமைந்துவிட்டன. கடைசியாக உளவுத்துறையின் எச்சரிக்கைகளைப் புறக்கணித்து, அலட்சியமாக நடந்து கொண்டதால் போர் வெடித்து, அனாவசியமாக நமது இராணுவத்தினரைப் பலிகொடுக்க வேண்டியிருந்தது. எச்சரிக்கையாக இருந்திருந்தால், போரைத் தவிர்த்திருக்க முடியும் என்பது எதிர்த்தரப்பின் குற்றச்சாட்டு.

இந்தியா - பாகிஸ்தான் இரண்டு நாடுகளுக்குமிடையிலான மோதலுக்கும் முறுகலுக்கும் அடிப்படையானது காஷ்மீர் விவகாரம்.

''காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்பது முடிந்து போன விவகாரம். இதில் தீர்க்க வேண்டிய பிரச்சினை என்பது பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பிலுள்ள காஷ்மீரின் இன்னொரு பகுதியை மீட்டு, இந்தியாவுடன் இணைப்பதுதான்; எல்லைக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பால் இருந்து பாகிஸ்தான் கூலிப்படையினரான தீவிரவாதிகளை ஏவிவிடுவதை நிறுத்த வேண்டும்; இதுபற்றி மட்டும்தான் பேச முடியும். வேறு எந்தப் பிரச்சினை பற்றியும் பேச முடியாது. அப்படியே காஷ்மீர் ஒரு விவகாரம் என்றாலும், அது இரண்டு நாடுகளுக்கும் இடையிலானது; இதில் வேறு எந்த மூன்றாவது நாடும் தலையிட, பஞ்சாயத்து செய்யவிட மாட்டோம்'' என்பதுதான் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக இந்திய அரசின் நிலை.

''காஷ்மீர் மக்களின் விருப்பத்துக்கு மாறாக, அதன் ஒரு பகுதியை ஐம்பதாண்டுகளாக இந்திய இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. அம்மாநில மக்கள் எங்கள் இசுலாமியச் சகோதரர்கள். அவர்கள் பாகிஸ்தானுடன் இணையவே விரும்புகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின்படி உலக நாடுகளின் மேற்பார்வையில் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பு நடத்தி முடிவுகாண வேண்டும். அதற்காகவும், காஷ்மீரை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்றும் போராடும் போராளிகளை தார்மீக ரீதியில் மட்டுமே பாகிஸ்தான் ஆதரிக்கிறது. மற்றபடி, கூலிப் படை திரட்டவோ, பயிற்சியும் ஆயுதங்களும் தரவோ கிடையாது. உலக நாடுகள் தலையிட்டு காஷ்மீர் விவகாரத்தைத் தீர்த்து வைக்க வேண்டும்'' என்பதுதான் பாகிஸ்தான் நிலை.

உண்மை நிலை என்ன? இந்தியத் துணைக் கண்டத்தில் தனது நேரடி ஆட்சியில் இருந்த பகுதிகளை இந்தியா - பாகிஸ்தான் என இரண்டு நாடுகளாகப் பிரித்த ஆங்கிலேய ஏகாதிபத்தியம், எஞ்சியிருந்த 600 குறுநில மன்னர் ஆட்சிப் பிரதேசங்கள் தமது விருப்பப்படி யாருடனும் இணையலாம் என்று விட்டுவிட்டுப் போனது. அப்போது பெரும்பான்மையாக முஸ்லீம்கள் வாழும் காஷ்மீரை ஆண்டு வந்த இந்து அரசர் அரிசிங் இந்தியாவுடன் இணைவதாக முடிவு செய்தார். அதற்காக மற்ற அரசர்களைப் போலவே பல கோடி ரூபாய் மானியமாகப் பெற்றார். ஆனால், இந்த இணைப்பை எதிர்த்து காஷ்மீர் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். நாடு பிரிவினை அடைந்த போது மற்ற இடங்களில் நடந்ததைப்போல இந்து - முஸ்லீம் கலவரம் காசுமீரில் நடக்கவில்லை; சுயநிர்ணய உரிமைப் போராட்டம்தான் வெடித்தது. அதை மதியாது, காஷ்மீரை விரைந்து கைப்பற்றுவதற்கான ஆக்கிரமிப்புப் போரில் இந்தியா, பாகிஸ்தான் இராணுவங்கள் குதித்தன.

ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு போர் நிறுத்தப்பட்டது. ஐ. நா. மேற்பார்வையில் பொதுவாக்கெடுப்பு நடத்தி, காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமை நிலைநாட்டப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. அதை அப்போது ஒப்புக் கொண்ட நேரு, பிறகு நிறைவேற்ற மறுத்துவிட்டார். அப்போது இந்தியாவும் பாகிஸ்தானும் கைப்பற்றியிருந்த பகுதிகளை உறுதிப்படுத்திக் கொண்டு, காஷ்மீரைப் பிரித்து வைத்துக் கொண்டன. ஒன்று மற்றொரு நாடு பிடித்து வைத்திருக்கும் பகுதியின் மீது உரிமை பாராட்டிக் கைப்பற்ற முயலுவதுதான் இரு நாடுகளுக்குமிடையிலான தீராத விவகாரம்.



கார்கில் போர் - காஷ்மீர் விவகாரம் குறித்து பா.ஜ.க. அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த வந்த அமெரிக்க அரசின் துணை உதவிச் செயலர் ஜிப்சன் லான்பர் (இடது)

காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக்கான பொதுவாக்கெடுப்பிற்கான போராட்டத்தில் முன் நின்று, அதற்காக, ''பொது வாக்கெடுப்பு முன்னணி'' என்று பெயரிலேயே தனி இயக்கம் நடத்தினர் ஷேக் அப்துல்லா. காஷ்மீருக்கு சிறப்பு உரிமைகள் கொடுத்து, ஷேக் அப்துல்லாவுக்குச் சிறப்புச் சலுகைகளும் அதிகாரமும் கொடுத்து அரசு அமைக்க ஏற்பாடு செய்தார் நேரு. 1956-இல் ''பொதுவாக்கெடுப்பு முன்னணி''யைப் பிளவுபடுத்தி, பக்சிகுலாம் முகமது என்பவன் தலைமையில் ஆட்சி அமைத்துவிட்டு, ஷேக் அப்துல்லாவை அரண்மனைச் சிறையில் வைத்தார். அடுத்தடுத்து தில்லுமுல்லு தேர்தல்கள் நடத்தி, காஷ்மீரில் காங்கிரசின் கைக்கூலி அரசுகள் நிறுவப்பட்டன. அதிகாரம், ஆடம்பர, உல்லாச, ஊதாரி வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட ஷேக் அப்துல்லாவின் குடும்பமும் வாரிசுகளும் நிரந்தரமாகவே தில்லி அரசுடன் இணைந்தது.

ஆனால், ஜம்மு - காஷ்மீர் அடங்கிப் போவதாக இல்லை. ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் கீழ் திரண்டு ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர். இந்தியா - பாகிஸ்தான் இரண்டு நாடுகளுமே அதை வெறுத்து ஒடுக்க முனைந்தனர். ஜ.கா.வி.மு. வின் நிறுவனர் மெக்பூல் பட் மீது கொலைக் குற்றஞ்சுமத்தி தூக்கிலிட்டுக் கொன்றது, இந்திய அரசு. அதன் இன்னொரு தலைவரான அமானுல்லா கானை வீட்டுச் சிறையில் வைத்திருக்கிறது, பாக். அரசு. மூன்றாவதாக வந்த யாசின் மாலிகை பல ஆண்டுகள் சிறையிடைத்து, சித்திரவதை செய்து தீராத நோயாளியாக விடுதலை செய்து, தனது கண்காணிப்பில் வைத்திருக்கிறது, இந்திய அரசு. காஷ்மீரை பாகிஸ்தானோடு ஐக்கியப்படுத்துவதை ஜ.கா.வி.மு ஏற்கவில்லை. எனவே, அதை ஒழித்துவிட்டு, காஷ்மீர் பிரச்சினையை இசுலாமியமயமாக்கி தன்னோடு இணைத்துக் கொள்ளும் நோக்கத்தோடு பல கைக்கூலி அமைப்புகளை நிறுவியது, பாகிஸ்தான். காஷ்மீரில் பாகிஸ்தான் காலூன்றி, இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகளோடு பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டு செல்வாக்குப் பெற்றதற்குக் காரணம், அதன் சதியும் பெரும்பான்மையான காஷ்மீர் மக்கள் இசுலாமியர் என்பதும் மட்டுமல்ல; காஷ்மீரத்து இசுலாமியர்கள் மத அடிப்படைவாதத்துக்கு மாறாக, தாராளவாத சூஃபி பாரம்பரியத்தில் ஈடுபாடுடையவர்கள். தொடர்ந்து அம்மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து வருவதன் மூலம், காஷ்மீர் விவகாரத்தைத் தனது தீராத தலைவலியாக்கிக் கொண்டது இந்தியாதான்.

1948 போரின் முடிவில் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருந்ததுதான் இப்போது போர் நடந்த கார்கில் பகுதி. 1965 போரில் இந்திய இராணுவம் கைப்பற்றினாலும், தாஷ்கண்ட் பேச்சு வார்த்தையின் போது மீண்டும் அப்பகுதி பாகிஸ்தானிடம் திருப்பித் தரப்பட்டது. 1971-இல் மீண்டும் அப்பகுதியை இந்தியா கைப்பற்றியது. வங்கதேசப் போரில் பெருந்தோல்விய


படிப்பகம்

www.padippakam.com

டைந்து, ஒரு இலட்சம் இராணுவத்திரை போர்க் கைதிகளாக இந்தியா பிடித்து வைத்திருந்த நிலையில் நடந்தது சிம்லா பேச்சுவார்த்தை. அப்போது இருநாடுகளும் ஒப்புக்கொண்டதுதான் இப்போதுள்ள கட்டுப்பாடு எல்லை. இதன்படிதான் பாகிஸ்தான் ''ஆக்கிரமித்த'' பகுதிகள் இந்தியா வசம் வந்தன.

அந்த சிம்லா பேச்சுவார்த்தையில் கூட மனித நடமாட்டமே இல்லாத பனிப் பள்ளத்தாக்கு என்பதால் சியாசின் பிராந்தியத்தில் கட்டுப்பாடு எல்லை வரையறுக்கப்படாமலேயே விடப்பட்டது. 1984-இல் பாக். மலையேறும் குழு ஒன்றை சியாசின் பகுதியில் இந்திய இராணுவம் கண்டதாகக் கூறி, ''மேகதூதம் நடவடிக்கை'' என்கிற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. அன்றிலிருந்து, யாருக்கும் பயனற்ற அந்தப் பனிப் பாலைவனத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக இரண்டு நாடுகளும் போரிட்டுக் கொண்டிருக்கின்றன..


இப்போது வெடித்துக் கிளம்பிய கார்கில் போருக்கு முன்பாகவே இன்னொரு ''தாழ்நிலைப் போரை'' 1984 ஆம் ஆண்டிலிருந்தே இந்தியாவும் - பாகிஸ்தானும் நடத்தி வருவது பாமரத்தனமான தேசபக்தர்கள் பலருக்கும் தெரியாது. பல ஆயிரம் அடி உயரத்தில் உள்ள சியாசின் பனிமலைச் சிகரத்தின் மீது உரிமை கொண்டாடி, நாளுக்கு 4 கோடி ரூபாயும் ஆண்டுக்குப் பல இராணுவத்தினரையும் காவுகொடுக்கின்றன.

கார்கில், சியாசின் தவிர ஜம்மு - காஷ்மீர் முழுவதும் ஒரு இலட்சத்துக்கும் மேலான இந்திய இராணுத்தினர், துணை இராணுவத்தினர் அன்றாடப்போரில் ஈடுபட்டுள்ளனர். பல இலட்சம் காஷ்மீர்ப் பண்டிதர்கள் - காஷ்மீர் பார்ப்பனர்கள் அகதிகளாக வைத்துப் பாதுக்காக்கப்படுகின்றனர்.

ஜம்மு - காஷ்மீர் பிரச்சினைக்கான தீர்வு காண்பதில் இந்திய ஓட்டுக்கட்சிகள் அனைத்துமே அடிப்படையில் ஒரே கண்ணோட்டத்தைத்தான் கொண்டிருக்கின்றன. இந்தியா விவகாரத்தில் அமெரிக்காவோ, ஐக்கிய நாடுகள் சபையோ வேறு எந்த மூன்றாவது தரப்போ தலையீடு அல்லது பஞ்சாயத்து செய்வதை அடியோடு நிராகரிப்பது; இல்லையென்றால், ஜம்மு - காஷ்மீர் மக்களின் பொதுவாக்கெடுப்பு - சுயநிர்ணய உரிமைத் தீர்வை ஏற்கும்படி எந்த மூன்றாம் தரப்பும் கோரும்; அது இந்தியாவுக்கு எதிராகப் போகும் என்று அஞ்சுகின்றனர். எனவே, காஷ்மீர் விவகாரம் ஒரு சர்வதேசப் பிரச்சினையாவதை எப்போதும் கடுமையாக எதிர்த்து வந்திருக்கிறது, இந்திய அரசு. அதேசமயம், எல்லைக் கப்பால் இருந்து தீவிரவாதிகளை ஏவிவிடுவதால் பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக அறிவித்து, பொருளாதாரத் தடைகள் விதித்து ஒடுக்க வேண்டும் என்று தொடர்ந்து உலக நாடுகளை வற்புறுத்தி வருகிறது. இதன் மூலமும் இராணுவ, துணை இராணுவ அரசு பயங்கரவாத ஒடுக்குமுறையின் மூலமும் காஷ்மீர் போராட்டத்தை ஒடுக்கி விட முடியும் என்று எல்லா ஓட்டுக்கட்சிகளும் நம்புகின்றன.

இதோடு கூடவே சில அரசியல் சிறப்புரிமைகளும் பொருளாதாரச் சலுகைகளும் கொடுத்தால் காஷ்மீர் மக்களைச் ''சரிக்கட்டி'' விட முடியும் என்று காங்கிரசும் போலி இடது சாரிகளும் நம்புகின்றனர். இதில் மட்டும் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் மாறுபடுகிறது. காஷ்மீர் மக்கள் மீதான அரசு பயங்கரவாதம், பாக். மீதான அணு ஆயுதத் தாக்குதல் உட்பட போர் தொடுப்பது மட்டுமே சரியானது; வேறு சிறப்புரிமையோ சலுகையோ கூடாது என்கிறது.

பாகிஸ்தானைப் பொருத்தவரை இந்தியா மேற்கொள்ளும் அரசு பயங்கரவாதச் செயல்கள் காஷ்மீர் மக்களைத் தன்பக்கம் தள்ளும்; காஷ்மீர் மக்களை மதவாதத்திற்குள் வீழ்த்தி, இந்தியாவுக்கு எதிரான ஆத்திரம் மூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, காஷ்மீரில் பொதுவாக்கெடுப்பிற்கு நிர்பந்திக்கும்படி சர்வதேசப் பிரச்சினையாக்கி, முழுமையாகக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்று நம்புகிறது. கிழக்குப் பாகிஸ்தானைத் துண்டாடி, வங்க தேசத்தை உருவாக்கியதற்காக இந்தியாவைப் பழிவாங்கவும் துடிக்கிறது.



பாகிஸ்தானின் குண்டு வீச்சால் தகர்க்கப்பட்ட இந்தியத் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம்

இந்த இந்தியா, பாகிஸ்தான் நாடுகளது நிலைகளுக்கும் மாறாக, காஷ்மீரில் உள்ள இப்போதைய கட்டுப்பாட்டு எல்லையை நிரந்தரமாக்கியோ, இந்து - முஸ்லீம் பகுதிகளாகப் பிரித்தோ இரண்டு நாடுகளுக்கும் கூறுபோட்டுக் கொடுக்கும் திட்டத்தை அமெரிக்கா வரைந்திருக்கிறது. அதற்கு காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா மற்றும் ஜம்மு பகுதி பா.ஜ.க - ஆர்.எஸ்.எஸ். பிரமுகர்கள் உட்பட பல உள்ளூர் தலைவர்கள் ஆதரவு திரட்டிவருகின்றனர். இதை ஏற்கும்படியான சர்வதேச நிர்பந்தமும் அதிகரித்து வருகிறது.

காஷ்மீர் பிரச்சினைக்கு 50 ஆண்டுகளுக்கு மேலான வரலாறு இருக்கிறது. அன்றிலிருந்து இந்தியாவுக்குப் பாதகமான நிலைமைகள் அதிகரித்து வருகின்றன. ஆட்சிக் கவிழ்ப்புகள், தில்லுமுல்லுத் தேர்தல்கள், நிர்வாகத்தில் காஷ்மீர்ப் பார்ப்பன ஆதிக்க முயற்சி, அரசு பயங்கரவாதச் செயல்களால் காங்கிரசு காஷ்மீர் மக்களிடம் இந்தியா மீதான வெறுப்பை வளர்த்தது. இந்துத்துவ மதவாதமயமாக்குதல், போக்ரான்-II குண்டுவெடிப்பு மிரட்டல் போன்றவற்றால் மேலும் பாதகமான நிலைமை உருவாக்கியது, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

''போக்ரான்-II குண்டுவெடிப்பு உட்பட பா.ஜ.க அரசின் தவறான அரசுதந்திர அணுகுமுறை காரணமாக காஷ்மீர் பிரச்சினையை சர்வதேசிய மயமாக்கிவிட்டது. உளவுத்துறை எச்சரித்தும் தக்க நடவடிக்கை எடுக்கத் தவறி, பாக். ஆக்கிரமிப்பு மற்றும் கார்கில் போருக்கு வித்திட்டுவிட்டது'' என்று காங்கிரசும் போலி இடதுகளும் குறை கூறுகின்றனர்.

உளவுத்துறையும், இராணுவமும் மற்ற அரசுத்துறைகள் எப்படியோ அதே போலத்தான் இயங்கும். கூடுதலாக, அடக்குமுறையும் பெருந்தீனியும் தின்னும். மற்றபடி இவை மட்டும் திறமையோடும் தேசபக்தியோடும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது. கள்ளச்சாராயச் சாவு முதல் குண்டு வெடிப்பு வரை எது நடந்தாலும் உளவுத்துறை, போலீசு என்ன செய்தன? ஏன் எச்சரிப்பு நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குறை சொல்வது எதிர்க்கட்சிகளுக்கு வாடிக்கை. இதை எதிர்பார்த்து காலந்தவறாமல் கட்டுக்கதைகளை வெறும் எச்சரிக்கை குறிப்புகளாக அனுப்பி வைப்பது உளவுத்துறையின் வாடிக்கை. முன் எச்சரிக்கை நடவடிக்கை என்று மக்களை ஒடுக்குவது போலீசின் வாடிக்கை. இதுவே முறையாகி - வாடிக்கையாகிப் போய்விடும்போது, ''புலி வருது! புலி வருது!'' கதைதான் முடிவில் நடக்கும். அப்படி வந்த வாடிக்கையான எச்சரிக்கையை இராணுவமும் ஆட்சியாளர்களும் அலட்சியம் செய்துவிட்டார்கள்.

ஆண்டுக்கு ஏழுமாத குளிர்காலத்தில் ''கட்டுப்பாட்டு எல்லை'' முழுவதும் பனி மூடி கிடக்கும். இந்தியா - பாகிஸ்தான் இரு நாட்டு இராணுவங்களும் பின்வாங்கிக் கொண்டு, பனி விலகியதும், கோடை துவங்கியதும் கட்டுப்பாட்டு எல்லைச் சாவடிகளுக்குத் திரும்பும். ''இந்த ஆண்டு, ஒரு புறம் ஆக்கிரமிப்பு சதித்திட்டம் தீட்டி குளிர்காலம் முடியும் முன்னரே பாக். இராணுவம் மற்றும் கூலிப்படை ஊடுருவி விட்டது. இது எதிர்பாராத சதி, நம்பிக்கைத் துரோகத்தின் விளைவு. இருந்தாலும் ஊடுருவல்காரர்களை விரட்டி, பிரம்மாண்டமான வெற்றி ஈட்டி விட்டோம். சர்வதேச



படிப்பகம்

www.padippakam.com

ரீதியில் தனிமைப்பட்ட பாகிஸ்தான் அமெரிக்க அதிபர் கிளிண்டனிடம் மன்றாடி, தலையிடக்கோரி, இறுதியில் கூலிப்படையினரைப் பின்வாங்கிக் கொண்டது'' என்கிறது பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் அரசு.

இவையெல்லாம் பொய்கள்தாம். மண்ணாசை பிடித்த இரண்டு எதிரெதிர் நாடுகள் ஒன்றுக்கெதிராக மற்றது சதி, நாசவேலை, நம்பவைத்துக் கழுத்தறுப்பு செயல்களில் ஈடுபடுவது வழக்கமானது தான். இதில் வியப்புக்கும் அதிர்ச்சிக்கும் இடமில்லை. ''பாபரி மசூதியை இடிக்க மாட்டோம்'' என்று உச்சநீதி மன்றத்தில் உறுதி கூறிவிட்டு, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் இடிக்கவில்லையா? அது போலத்தான் இதுவும்.

1962 இந்திய - சீனப் போரில், 1987 ஈழ ஆக்கிரமிப்புப் போரில் சந்தித்ததைப் போல பெரும் இழப்பை இந்திய இராணுவம் அடைந்துள்ளது. 48 மணி நேரத்தில், இரண்டே நாட்களில் ஊடுருவல்காரர்களை விரட்டுவோம் என்று சவடால் அடித்தார் இராணுவ மந்திரி. ஆனால், 48 நாட்கள் போர் நடந்தது. முன்பே திட்டமிட்டு, ''காங்கிரீட்'' பதுங்கு குழிகளை ஊடுருவல்காரர்கள் அமைத்துவிட்டார்கள் என்கிறது, இந்திய அரசு. ஆனால், அந்தப் பதுங்கு குழிகள், பாதுகாப்பு அரண்கள் எல்லாம் இந்திய இராணுவம் அமைத்தவை. வசதியாக வந்து உட்கார்ந்து விட்டார்கள் ''பாக். ஊடுருவல்காரர்கள்.''

மே 5-ஆம் தேதி எல்லையில் நிலைமையை மதிப்பிடும் இராணுவக் குழு ஒன்று வழக்கம்போல ரோந்து போனது. திரும்பவே இல்லை; அதன் பிறகு போன இரண்டு குழுக்களும்கூடத் திரும்பவில்லை. அனைவரும் கொல்லப்பட்டார்கள். பரூக் அப்துல்லாவும் இராணுவ அதிகாரிகள் சிலரும் தில்லிக்குப் போய் நிலைமையை எடுத்துச் சொல்லி வலியுறுத்திய பிறகு, இராணுவ நடவடிக்கை எடுப்பதாக மே 25 அன்று அமைச்சரவைக் குழு முடிவு செய்தது. வரும் தேர்தலுக்குள் இழந்த பகுதிகளை மீட்பதற்கான உத்திரவு - நிர்பந்தம் பறந்தது. குண்டுவீச்சில் மூன்று விமானங்களை இழந்த இந்தியா, தொடர்ந்து இடைவிடாது பீரங்கித் தாக்குதல் நடத்தியது. இருந்தும் மலைச்சிகரங்களில் பாதுகாப்பாகப் பதுங்கியிருந்த ''பாக். ஊடுருவல்காரர்''களைத் தரைவழியாக முன்னேறி அழிப்பது எளிதாக இல்லை. ஆரம்பத்தில் 350 ஊடுருவல்காரர்கள் இருப்பதாகக் கணிக்கப்பட்டது. பின்னர் 800 பேர் எனத் திருத்தப்பட்டது. குறைந்தது 1000 பேரைச் சமாளிக்க 45,000 இந்திய இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். தரைவழிப் போரில் இந்தியத் தரப்பில் 413 பேர் கொல்லப்பட்டனர்; 584 பேர் படுகாயமடைந்தனர் என்கிறது அரசு அதிகாரபூர்வத் தகவல். 2000 பேர் பலியாகி இருக்கலாம் என்பது அதிகாரபூர்வமற்ற தகவல். பலி கொடுப்பதற்காக அனுப்பப்பட்ட ஆடுகளைப் போல சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இது தவிர, மாவட்டத் தலைநகரான கார்கில் நகரில் இருந்த உணவு மற்றும் ஆயுதக் கிடங்குகள் வானொலி நிலையம், நகரப் போலீசு அதிகாரி அலுவலகம், வீடு ஆகியவை குண்டு வீசித் தகர்க்கப்பட்டன.

இராணுவ இழப்புகளை விட, கார்கில் போரில் இரண்டு முக்கியமான பின்னடைவுகளை இந்திய அரசு சந்தித்துள்ளது. காஷ்மீரின் இன்னொரு பகுதியை ''பாக். ஆக்கிரமித்துள்ள காஷ்மீர்'' என்றும் அதையும் மீட்பதே இலட்சியமாகவும் இந்தியா கொண்டுள்ளது. அதனாலேயே தற்போதுள்ள கட்டுப்பாட்டு எல்லையைத் தற்காலிகமானதாகவே இந்தியா கருதிவருகிறது. ஆனால், கார்கில் போர் துவங்கியதில் இருந்து, ''கட்டுப்பாட்டு எல்லையின் புனிதத்தைக் காப்போம்'' என்று இந்தியா சூளுரைக்கிறது. அது ''புனிதமானது'' என்றால், காஷ்மீரின் ஒரு பகுதியை மட்டும் தக்க வைத்துக் கொள்வதே பெரும் பாடாகிவிட்டது என்றாகிறது. காஷ்மீரைக் கூறுபோட்டுப் பகிர்ந்து கொள்ளும் கருத்துக்கு வலிமை சேர்க்கிறது.

காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாம் நாடு தலையிட்டு, சர்வதேசமயமாவதை இந்தியா கடுமையாக எதிர்த்து வருகிறது. ஆனால், கார்கில் போர் புதை சேற்றில் சிக்கியதாகிவிடும் என்கிற பீதி நாளுக்கு நாள் அதிகரித்தது. அதன் உண்மை நிலைக்கு மாறாக நாட்டுக்குள் பிரச்சாரம் செய்தது. செய்தியாளர்கள் யாரும் போர் முனையை நெருங்காதவாறு பல மைல்களுக்கு அப்பால் நிறுத்தப்பட்டனர். இராணுவம் கொடுத்த ஒலி - ஒளி நாடா, புகைப்படம் மற்றும் அறிக்கையே பத்திரிகைகள் - வானொளியில் வந்தன. அரசின் பீதி அதிகரித்ததால் பிரச்சினையில் தலையிடுமாறு மேலைநாடுகளின் ''நேட்டோ''விடம் இரகசிய அழைப்பு விடுத்தது, இந்தியா, அமெரிக்காவின் அரசுத்துறை துணைச் செயலாளருக்குக்கூட அரசு உபச்சாரம் கொடுத்து வரவேற்றது. அமெரிக்கா, அதிகாரிகள் மட்டத்தில் இந்தியா - பாக். அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. அதில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி பாக். பிரதமர் நவாஸ் செரிப்பை அமெரிக்காவுக்கு அழைத்து, பாக். ஊடுருவல்காரர்களை விலக்கிக் கொள்ளும் முடிவு எட்டப்பட்டது.

ஆக, மூன்றாம் தரப்பு தலையீட்டை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளும் படியானது. காஷ்மீரை சர்வதேசப் பிரச்சினையாக்கும் பாகிஸ்தானின் நெடுநாளைய திட்டமும் நிறைவேறியது. ஆனால், ''இந்தியாவின் இராணுவத் தாக்குதல், நெருக்குதல் காரணமாக, அமெரிக்காவின் காலில் நவாஸ் ஷெரிப் விழுந்து, தலையிடும்படி கோரி, அதைக்காட்டித் தப்பித்து ஓடியது'' என்பதாக இந்தியா பிரச்சாரம் செய்கிறது.

நேரு - இந்திரா காலத்தில் இருந்தே இந்தியாவை சோவியத் ஒன்றிய சார்பு நாடாகக் கருதி வந்தது அமெரிக்கா. இந்தோ - சோவியத் இராணுவ ஒப்பந்தம் ஏற்படும் முன்னரே, பாக்.குடன் அமெரிக்கா இராணுவ ஒப்பந்தம் போட்டு, இராணுவத் தளங்களை வைத்துள்ளது. சோவியத் ஒன்றியக் கலைப்புக்குப் பிறகு அமெரிக்காவின் பக்கம் இந்தியா சாய்வது அதிகமாகியது. போக்ரான்-II குண்டுவெடிப்பு, ஏவுகணை பரிசோதனைகளுக்குப் பிறகு தெற்கு ஆசிய பிராந்திய துணை வல்லரசாக இந்தியா வளர்வதைத் தடுக்க விரும்பியது, அமெரிக்கா. இந்தியா - பாக். இரு நாடுகளையும் கண்டிப்பதாகவும், நடுநிலை வகிப்பதாகவும் நாடகமாடியது. பாக். வசமுள்ள காஷ்மீரின் கில்ஜித் நகரில் அமெரிக்க இராணுவத் தளமுள்ளது. சீனாவை உளவு பார்ப்பது உட்பட அமெரிக்காவுக்கு இராணுவ முக்கியத்துவமுடைய காஷ்மீரில் ஆதிக்கம் பெறுவது அவசியமாக உள்ளது. அதற்கேற்ப இந்தியா - பாக். உறவை தந்திரமாகக் கையாள்கிறது. அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவு அமைப்புதான் இந்தியா - பாக். இரு நாடுகளுக்கும் இரகசிய செய்திகளைத் தருகிறது. பாக். - ஊடுருவல் பற்றிய தகவலை முன்னரே அறிந்தும் மறைத்துவிட்ட சி.ஐ.ஏ., பின்னர் பாக். இராணுவ அதிகாரிகளிடையிலான இரகசிய உரையாடல் செய்தியைக் கொடுத்தது. இப்படி இரகசியத் திட்டங்கள் மூலம் காஷ்மீர் விவகாரத்தில் தலையிட்டு முழு ஆதிக்கம் பெற எத்தணிக்கிறது.

ஆரம்ப காலம் முதல் அமெரிக்க ஆதரவு, சோவியத் ஒன்றிய எதிர்ப்புக் கொள்கையுடைய பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல் இதுவரை பேசிவந்த காஷ்மீர் கொள்கைக்கு முரணாக, அமெரிக்கத் தலையீட்டை ஏற்பதில் வியப்பில்லை. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் காஷ்மீரில் அமெரிக்காவின் தீர்வையும் ஏற்கும். ஆனால், அதன் ஒட்டுப் பொறுக்கும் அரசியலுக்கும், தேசிய வெறிக் கொள்கைக்கும் அது எதிரானது என்பதால், பா.ஜ.க. அரசு இப்போதைக்குத் தயங்குகிறது. அதற்கு மாறாக, காஷ்மீரில் இன்றைய நிலையைப் பாதுகாப்பதும் பெரும் நெருக்கடியையே நிரந்தரமாக்கிவிடும். குறிப்பாக, காஷ்மீரின் கட்டுப்பாட்டு எல்லையைக் காப்பதற்கே ஒரு நாளைக்கு 10 கோடி ரூபாய் செலவும், ஒரு இலட்சம் இராணுவத்தினரின் பணியும் தேவை. ஏற்கனவே கார்கில் போர் 5000 கோடி ரூபாயை விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது. மேலும் நவீன ஆயுதங்கள், பராமரிப்புச் செலவு உட்பட ஆண்டுக்கு 10,000 கோடி ரூபாய் தேவை. அந்தச் சுமை முழுவதும் இந்திய மக்கள் தலைமையில் ஏற்றப்படும். கடைசியாக, உடும்பு பிடிக்கப் போனவன், ''உடும்பு வேண்டாம், கையை விட்டால் போதும்'' என்ற கதையாகவே இருக்கும்.

• மாதவன்


படிப்பகம்

www.padippakam.com

# பார்ப்பன - பனியா சேவையில் பெரியாரியம் - அம்பேத்கரியம்

**சா**தி, மத அரசியல் - சமூக அமைப்புகளை இழுப்பதிலும் பிளப்பதிலும் கருணாநிதியும் ஜெயலலிதாவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அதில் பெருமளவு வெற்றியும் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் வன்னியர் மற்றும் ஆதிதிராவிடர் எனப்படும் தாழ்த்தப்பட்டவர் ஆகிய இரண்டு சாதிகள்தாம் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர். வன்னியர் சாதி ஆதரவை பெற்றதாகக் கூறப்படும் இராமதாசு தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி, தி.மு.க. - பா.ஜ.க. அணியில் இடம் பெற்றுள்ளது. இதற்கு ஈடுகொடுக்க வேண்டுமானால் ஆதிதிராவிட தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதரவைப் பெற வேண்டும். ஏற்கனவே இவ்விரு சாதிகளுக்குமிடையே முறுகல் - மோதல் நிலை நிலவுவதால், தம்பக்கம் அச்''சாதித் தலைவர்''களை இழுப்பதற்கான முயற்சியில் இறங்கினார் ஜெயலலிதா.

ஜெயலலிதாவின் சகபாடி சசிகலாவின் கணவரும் அரசியல் தரகருமான நடராஜனும், வடமாநில ''தலித் தலைவர்'' கன்ஷிராமின் தமிழகப் பிரதிநிதி தேவநாதனும் நெருங்கிய தொழில் கூட்டாளிகள். உ.பி., தில்லியில் இருவரும் பல தொழில்களைக் கூட்டுச் சேர்ந்து நடத்துகின்றனர். ''தலித்'' தலைவர்களில் ஒருவரென கூறிக் கொண்டு திரியும் தேவநாதன் மூலமாக வட மாவட்ட ஆதிதிராவிட சாதித் தலைவர்களுடன் பேரம் பேசுவதும் அணி சேர்ப்பதும் ஜெயலலிதா - சசிகலா - நடராஜனுக்கு எளிதாக முடியக் கூடியது தான்.

பார்ப்பன - சனாதன இந்து மதவெறி மேல்சாதிக் கட்சியும், சாதிக் கலவரங்களை ஒடுக்குவதாகக் கூறிக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் - இயக்கங்கள் மீது போலீசு அராஜக அடக்குமுறையை ஏவிய கருணாநிதியும் ஒரே அணியில் இருக்கின்றனர். இதையே காரணமாக வைத்து இதற்கு எதிரணியான ஜெயலலிதாவுடன் இணைவதாக ஆதிதிராவிட சாதி - அரசியல் அமைப்புகளின் தலைவர்கள் கூறுகின்றனர். இதைவிட முக்கியமான காரணம் வன்னியர்களின் சாதி - அரசியல் ''தலைவரான'' இராமதாசு பா.ஜ.க. - தி.மு.க. அணியில் உள்ளார். அதற்கு எதிரணியில் இணைவதைவிட வட மாவட்ட ஆதிதிராவிட சாதி - அரசியல் அமைப்புகளின் தலைவர்களுக்கு வேறு வழியில்லை. எனவேதான் தாழ்த்தப்பட்ட சாதிகளிலேயே ஒரு பிரிவினரான ஆதிதிராவிடர் சாதியைச் சேர்ந்த ''தலைவர்கள்'' அனைவரும் ஜெயலலிதா பின்னே திரண்டுள்ளனர். இந்த ஒரு சாதிக்குள்ளும் வெவ்வேறு பகுதிகளின் குறுநில மன்னர்களாக நேற்று வரை ஆண்டு வந்த வை. பாலசுந்தரம், பூவை. மூர்த்தி, திருமாவளவன், கிருஷ்ணப்பறையனார், செ.கு. தமிழரசன் போன்றவர்கள் இப்போது ஒரு கூட்டமைப்பாக உருவாகியுள்ளனர். இதற்கெல்லாம் ஜெயலலிதா முதல் கன்ஷிராம் வரை நன்றி சொல்ல வேண்டும்.

இந்த அணி சேர்க்கையைப் புரட்டிப் போட்டாற் போன்றதொரு அணி சேர்க்கை தென்மாவட்ட சாதி - அரசியல் களத்தில் தோற்றம் பெற்றுள்ளது. இங்கே முட்டிக் கொண்டும் மோதிக் கொண்டும் நிற்கும் சாதி - அரசியல் அமைப்புகளான கிருஷ்ணசாமி தலைமையிலான புதிய தமிழகம் கட்சியும், சேதுராமன் தலைமையிலான மூவேந்தர் முன்னேற்றக் கழகமும் முறையே தேவேந்திரகுல வேளாளர் மற்றும் முக்குலத்தோர் சாதிகளின் பிரதிநிதிகள் எனக் கூறிக் கொள்பவை. இவ்விரு சாதிப் பிரிவுகள்தாம் தென்மாவட்டங்களில் பெரும்பான்மையான மக்களைக் கொண்டவை.

இவற்றில் முக்குலத்தோர் சாதியைச் சேர்ந்த அமைப்புகள் எல்லாம் சாதி ரீதியில் சசிகலா - நடராஜன் பின் நிற்பவை. ஜெயா - சசி கும்பலின் கிரிமினல் குற்றங்களைக் கூட ஆதரிப்பவை. ஜெயா - சசி ஆதரவு, பின்பலம், தூண்டுதலினால்தான் தென் மாவட்டங்களில் சாதிச் சண்டைகளை நடத்தியவை. இவ்வாறு முக்குலத்தோரின் சாதி - அரசியல் அமைப்புகள் ஜெயா - சசியின் கீழ் ஏற்கனவே திரண்டிருப்பதால், அவர்கள், கிருஷ்ணசாமியின் புதிய தமிழகக் கட்சி ஜெயா கட்சியுடன் அணி சேர்வதற்குத் தடையாக இருக்கின்றனர். ''ஒரு உறைக்குள் இரண்டு வாட்கள் இருக்க முடியாது'' என்பதைப் போலத்தான் ஒரே அணியில் முக்குலத்தோர் அமைப்புகளும், தேவேந்திரகுல வேளாளர் அமைப்பும் பங்கேற்க முடியவில்லை. அதோடு, கிருத்துவத் தன்னார்வக் குழுக்களுடனான தனது பின்னணி, இசுலாமிய மத - அரசியல் அமைப்புகளுடன் உள்ள தனது தொடர்பு காரணமாக, கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம், பா.ஜ.க. - தி.மு.க. அணியுடனும் சேரமுடியவில்லை.

இந்த உண்மையை மூடி மறைத்து விட்டு, ''சோனியா தலைமையிலான மதவாத எதிர்ப்புக் கூட்டணி - அதில் மூப்பனாரின் த.மா.கா.வும் புதிய தமிழகமும் இருக்கும்; அ.தி.மு.க. அதன் இளைய பங்காளியாக இணையலாம்'' என்றெல்லாம் யோசனைகளை கிருஷ்ணசாமி முன் வைத்தார். ஆனால், சோனியா இதை ஏற்காத நிலையில் அரசியல் அனாதைகளாகி விட்ட மூப்பனாரும் கிருஷ்ணசாமியும் மூன்றாவது அணி அமைத்து வருகின்றனர். இது வேறு வழியின்றி, முட்டுச் சந்திற்குத் தள்ளப்பட்டவர்களின் அரசியல் பிழைப்பு நாடகமாகவே அமையும். மற்றபடி இவர்களின் கொள்கை, கோட்பாட்டுப் பிதற்றல்கள், கௌரவப் பிரச்சினைகள் எல்லாம் வெற்று வேட்டுதான்.

மேற்கு மாவட்டங்களைப் பொருத்த வரை, வேளாளக் கவுண்டர்கள் புதிய வரவான பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். பக்கம் ஈர்க்கப்படும் அதேசமயம், அச்சாதியின் பிரதிநிதியெனக் கூறிக் கொள்ளும் கோவைச் செழியனின் தமிழர் தேசியக் கட்சியும் பா.ஜ.க. - தி.மு.க. கூட்டணியுடன் இணைந்துள்ளது. இங்கு இன்னொரு பெரும்பான்மை சாதியினரான அருந்ததியினர் இன்னும் உறுதியான சாதி - அரசியல் அமைப்பாக உருவாகாத அதே சமயம், இன்னும் எம்.ஜி.ஆர். - இரட்டை இலை மாயையில் மூழ்கியிருக்கின்றனர். இதை வைத்து கொங்கு வேளாளர்களின் சாதி - அரசியல் அமைப்புச் சாய்வுக்கு ஈடுகட்டிவிட முடியும் என்று ஜெயலலிதா கட்சி நம்புகிறது.

இவை தவிர, புதிதாக அமைந்துள்ள திராவிடத் தெலுங்கர் முன்னேற்றக் கழகம் மூலம் நாயுடு, ரெட்டியார், செட்டியார் சாதிகளையும், முன்னாள் அ.தி.மு.க. மந்திரியும் ஊழல் பெருச்சாளியுமான கு.ப. கிருஷ்ணன் அமைத்துள்ள ''தமிழர் பூமி'' கட்சி மூலம் முத்தரையர் சாதியையும் வளைத்துப் போடலாம் என்று பா.ஜ.க. - தி.மு.க. அணி முயலுகிறது.

பா.ஜ.க. - அ.தி.மு.க. ஆகியவற்றின் ஆட்சிக் கவிழ்ப்பு உருட்டல் மிரட்டல்களுக்கு அஞ்சி, இசுலாமிய தீவிரவாதம் - ஐ.எஸ்.ஐ. ஊடுருவல் ஒழிப்பு நடவடிக்கை என்கிற பெயரில் இசுலாமிய மக்கள் மீது அடக்குமுறையை ஏவிவிட்டது கருணாநிதி அரசு. பிறகு இந்து மதவெறி பாசிச



படிப்பகம்

www.padippakam.com

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். உடன் கூட்டணியும் அமைத்துவிட்டது. எனவே, இசுலாமிய மத - அரசியல் அமைப்புகள் அனைத்தும் பா.ஜ.க. - தி.மு.க.வுக்கு எதிரணியான காங்கிரசு - ஜெயலலிதாவிடம் தஞ்சமடைந்துள்ளன.

இவ்வாறு சாதி, மத ரீதியில் வேரூன்றி விட்ட அமைப்புகள் ஏதாவது ஒரு அணியில் சேர்ந்துவிடும் நிலையில், அதற்கு ஈடு கட்டும் வகையில் அந்தந்த சாதி, மத அமைப்புகளைப் பிளவுபடுத்தியும் புதுப் புது அமைப்புகளை உருவாக்கியும் தம் பக்கமும் அந்த சாதி, மதத்தினர் இருப்பதாகக் காட்டிக் கொள்ள எதிரணியினர் முயலுகின்றனர்.

இராமதாசுக்கு எதிராக வன்னிய சாதி சங்க நிறுவனர் சுப்பிரமணியன், நடராஜன், போட்டி பா.ம.க. தலைவர் தீரன், வன்னிய சிங்கங்கள் அமைப்பின் சுகதேவ் ஆகியோரை இழுத்துக் கொண்டுள்ளது ஜெயலலிதா கட்சி. மூவேந்தர் முன்னேற்றக் கழகம் ஜெயா - சசி பின்னே நிற்பதால், முக்குலத்தோரை இழுப்பதற்காக சண்முகையா பாண்டியன் என்கிற அதிரடித் தலைவரின் தேவரினக் கூட்டமைப்பை இழுத்துக் கொண்டுள்ளது பா.ஜ.க. - தி.மு.க. அணி.

இவ்வளவு காலமும் தம்பக்கம் நின்ற தேசிய லீக்கும், மற்ற இரு இசுலாமிய அமைப்புகளான முஸ்லீம் லீக்கும், தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகமும் ஜெயலலிதா அணியில் நிற்பதால், இந்த அமைப்புகளில் அதிருப்தியாளர்களை வென்றெடுப்பதில் தீவிர முயற்சி காட்டுகிறார், கருணாநிதி. ஏற்கனவே, வேலூர் நிஜாமுதீன், மாநிலப் பொதுச் செயலாளர் அமானுல்லாகான் மற்றும் அரவக்குறிச்சி எம்.எல்.ஏ. முகம்மது இஸ்மாயில் ஆகியோரைக் கொண்டு போட்டி அமைப்புகளை நிறுவுவதில் வெற்றி பெற்றுள்ளார்.

இதுவரை தொழில் - வியாபார நலன்களை முன்நிறுத்திய நாடார் சாதி அமைப்புகளை அரசியல்படுத்தி அணிசேர்க்கும் முயற்சியில் கருணாநிதி, ஜெயலலிதா தலைமையிலான இரு அணிகளுமே ஈடுபட்டுள்ளன. இந்த இரு அணிகளுமே முறையே ஊழல் எதிர்ப்பு - மதவாத எதிர்ப்பு என்பதே தமது முதன்மையான அரசியல் என்று பேசிக் கொண்டிருந்தாலும், நாற்காலி எண்ணிக்கை அரசியல்தான் நடத்திக் கொண்டிருக்கின்றன. அதை மனதில் வைத்துத்தான் சாதி, மத ரீதியில் வாக்குகளைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

* * *

இன்று பா.ஜ.க. மற்றும் காங்கிரசு தலைமையில் இரு பெரும் அணிகளாக அரசியல் கட்சிகள் தேர்தல்களைச் சந்திக்கின்றன. ஊழல் மற்றும் போலி மதச்சார்பின்மை கூட்டணிதான் காங்கிரசு - ஜெயா தலைமையிலானது என்று பா.ஜ.க. - தி.மு.க. அணி குற்றஞ்சாட்டுகிறது. மதவாத - வகுப்புவாத மற்றும் போலியான ஊழல் எதிர்ப்பு கூட்டணிதான் பா.ஜ.க. - தி.மு.க. தலைமையிலானது என்று காங்கிரசு - ஜெயா அணி சித்தரிக்கிறது.

எதிரணி மீதான குற்றச்சாட்டைப் பொருத்தவரை இரண்டு தரப்பிலும் உண்மை இருக்கிறது. காங்கிரசு - ஜெயா தலைமையிலான அணி மதச் சார்பற்றது என்கிற அவர்களது பிரச்சாரம் பித்தலாட்டமானது. காந்தி காலத்தில் இருந்து இந்துமத வாதத்துக்குத் தூபம் போட்டுக் கொண்டு வந்ததுதான், காங்கிரசின் வரலாறு. குறிப்பாக, அயோத்தி பாபர் மசூதிக்குள் நுழைந்து திருட்டுத்தனமாக இராமன் சிலையை வைத்து பிரச்சினைக்குள்ளாக்கியது நேரு ஆட்சியில் நடந்தது. அவரது பேரன் ராஜீவ் ஆட்சியில்தான் அந்த மசூதி இந்து வழிபாட்டிற்கும், செங்கல் பூசைக்கும் திறந்து விடப்பட்டது. இறுதியாக பாபர் மசூதி இடிப்புக்கு காவல் நின்றதும் காங்கிரசு ஆட்சிதான். அதற்குக் கரசேவையை ஆதரித்து ஆளனுப்பியது ஜெயலலிதா. தனது ஆட்சியில் இந்து முன்னணியின் மதவாத செயல்களுக்கு, வேதபாடக் கல்லூரி அமைப்பு போன்று பலவகையிலும் ஊக்கமளித்தது ஜெயலலிதாதான். பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுடன் அணி சேர்ந்து, கோவை குண்டு வெடிப்பு முதல் ஆட்சிக் கவிழ்ப்பு வரை இசுலாமியத் தீவிரவாத, ஐ.எஸ்.ஐ. ஊடுருவல் பீதி கிளப்பி, இசுலாமியர் மீதான அரசு அடக்கு முறை நடவடிக்கைகளை மீண்டும் மீண்டும் தூண்டினார்.

இதையெல்லாம் மறைத்துவிட்டு காங்கிரசு - ஜெயா அணிக்கு மதச்சார்பின்மை சாயம் பூசும் வேலையில் ஈடுபட்டுள்ளன இசுலாமிய, தாழ்த்தப்பட்ட சாதி - அரசியல் அமைப்புகள். நாற்காலி அரசியலுக்காக சாதி - மத ரீதியிலான அணி சேர்க்கையை அங்கீகரித்துத் துணை நிற்கும் போலி கம்யூனிஸ்டுகள், வெட்கக்கேடான முறையில் காங்கிரசு - ஜெயலலிதா கட்சிகளை உண்மையில் மதச்சார்பற்ற சக்திகள்தாம் என்று நற்சான்று கொடுத்து வருகின்றனர்.

மறுபுறம், ஊழல் எதிர்ப்புதான் முதன்மையான கடமை என்று கோட்பாட்டு வாதம் பேசும் பா.ஜ.க. - தி.மு.க. அணியும் ஊழலுக்கு அப்பாற்பட்டதல்ல. தெற்கே ஜெயலலிதா முதல் வடக்கே சுக்ராம் வரை அப்பட்டமாக உலகறிந்த ஊழல் பெருச்சாளிகளை சேர்த்துக் கொண்டு, அவர்களை நியாயப்படுத்தி நேற்றுவரை பேசி வந்தவர்கள்தான் பா.ஜ.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகிய கூட்டாளிகள். ஆயுத பேர ஊழல், இரும்பு எஃகு விலை நிர்ணய ஊழல் என 13 மாதங்களில் பல கோடி ஊழல் புரிந்து விட்டு, திடலடியாக விசாரணைக்கு மறுத்து வருவதுதான் பா.ஜ.க. கருணாநிதியின் ஊழல்கள் எல்லாம் உலகறிந்த உண்மை.

ஆக, வகுப்புவாத சக்திகளும், ஊழல் பெருச்சாளிகளும் இரண்டு அணிகளிலும் உள்ளனர். காங்கிரசு - ஜெயலலிதா அணி ஊழல் புரிந்திருந்தாலும் மதச்சார்பற்றது என்றோ; பா.ஜ.க. - தி.மு.க. அணி மதவாத சக்திகளைக் கொண்டது; ஆனால் ஊழலற்றது என்றோ கணிப்பதும் தவறு. ஊழலா? மதவாதமா? எது முதன்மை எதிரி? என்று சீர்தூக்கிப் பார்த்தாலும் உருவாகியுள்ள இரு அணிகளுமே ஊழலிலும் மதவாதத்திலும் ஊறியவைதாம்.

ஊழலா? மதவாதமா? என்கிற கேள்வியே எதிர்மறையிலானது. நாடு எதிர்கொள்ளும் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நேர்மறையான கொள்கை, கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டு, எது சரியானது என்று தெரிவு செய்வதற்கான வாய்ப்பு மக்களுக்குத் தரப்படவில்லை. அப்படிப்பட்ட கொள்கை கோட்பாடுகளில் இந்த இரு அணிகளுக்குமிடையே வேறுபாடு கிடையாது. இதை இராமதாசு, வாழப்பாடி இராமமூர்த்தி போன்ற பல அரசியல்வாதிகளும் பகிரங்கமாகவே ஒப்புக் கொள்கின்றனர்; மக்களும் அறிவர்.

ஆனால், இடதுசாரி அணிக்கும் மற்ற



பார்ப்பன மதவெறியர்களுடன் பெரியாரின் சீடர்கள்: பதவி - அதிகாரத்தின் முன் கொள்கை வெங்காயமானது!



படிப்பகம்

அரசியல் கட்சிகளுக்கும் அடிப்படை கொள்கை, கோட்பாடுகளில் ஏதோ வேறுபாடுகள் இருப்பதாக போலி கம்யூனிஸ்டுகள்தாம் பித்தலாட்டம் செய்கின்றனர். இடது சாரிகள் ஆளும் கேரளம், மே. வங்கம், திரிபுரா ஆகிய மூன்று மாநில ஆட்சிகளும், சுர்ஜித் - ஜோதிபாசு ஆகிய அரசியல் தரகர்களின் கூட்டு பேர நடவடிக்கைகளும் அவர்களை வேறுவிதமாகக் காட்டவில்லை; அவர்களும் நாடாளுமன்ற சாக்கடையில் படுத்துப்புரளும் அரசியல் பன்றிகள்தாம் என்றே காட்டுகின்றன.



கொடியங்குளம் கொலைகாரி ஜெயாவுடன் விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் (இடமிருந்து நான்காவது) திருமாவளவன் மற்றும் நிர்வாகிகள்: ம.க.இ.க.வை பார்ப்பனத் தலைமை என அவதூறு செய்தவர்களின் உண்மை முகம்!

எனவேதான், விதிவிலக்கின்றி நாட்டின் ஓட்டுக் கட்சிகள் எல்லாமே இப்போது சாதி, மத அரசியல் அணி திரட்டலில் ஈடுபட்டுள்ளனர். இங்கே மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும் இதே அணுகுமுறையைத்தான் கைக்கொள்ளுகின்றனர். ஆந்திராவில் நாயுடுகளின் தெலுங்கு தேசமும், ரெட்டிகளின் காங்கிரசும் மற்ற சாதிகளை இழுப்பதில் தீவிரம் காட்டுகின்றன. உ.பி.யில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கன்ஷிராமின் பகுஜன் சமாஜ், பிற்படுத்தப்பட்ட குறிப்பாக, யாதவர்களுக்கு முலயம் சிங்; ஜாட்டுகளுக்கு அஜித் சிங்; பார்ப்பன பனியா - ராஜபுத்திரர்களுக்கு பா.ஜ.க. எனப் பிரிந்துள்ளனர். பீகாரில் பார்ப்பனர், பூமிகார்களுக்காக பா.ஜ.க.வும், குர்மிகளின் சமதா கட்சியும் கூட்டணி சேர்ந்துள்ளன. யாதவர்களின் கட்சியாகிய லல்லுவின் ராஷ்ட்ரீய ஜனதா தளம் தாழ்த்தப்பட்ட மக்கள் - இசுலாமியர் ஓட்டு வங்கியை இழுக்கிறது. இப்படிப்பட்ட அணி சேர்க்கையைத்தான் பல மாநிலங்களிலும் காண முடிகிறது.

* * *

சாதி, மத ரீதியிலான இந்த அணி சேர்க்கைக்கு இந்த நாட்டின் தனிச் சிறப்பான சமூக அமைப்புதான் காரணமா? அப்படிக் கருதுவதில் ஒரு பாதி உண்மை இருக்கிறது. நாட்டின் பெரிய கட்சிகள் அனைத்தும் அரசியல், பொருளாதாரக் கொள்கைகளில் திவாலாகிப் போய்விட்டன; அவற்றுக்கிடையே வேறுபாடுகள், எல்லைக் கோடுகள் அழிந்துவிட்டன; சிறிய கட்சிகள் அவற்றை வால்பிடித்துப் போகும் நிலையில் உள்ளன என்பதில் மறுபாதி உண்மை இருக்கிறது.

சாதி, மத சமூக அமைப்பு இந்த நாட்டின் தனிச் சிறப்பான இயல்புகளில் ஒன்று என்றாலும், அதற்காக சாதி, மத ரீதியிலான அரசியல் அணி சேர்க்கை எந்த அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைக்காவது தீர்வாகுமா? தீர்வாகாது. அப்படிப்பட்ட தீர்வு காணும் முயற்சிகள் எதுவும் சாதி, மத அடிப்படையிலான சமூக அமைப்பு இறுகிக் கெட்டிப்படுவதற்கே உதவும். அதைத் தகர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மூர்க்கமாக எதிர்க்கும். ஏனென்றால், சாதி, மத அரசியல் அமைப்புகளின் தோற்றமே அந்தந்த சாதி, மத நலன்களை ஆதார நோக்கமாகக் கொண்டவை. இவ்வாறு முரண்பட்ட, மாறுபட்ட நலன்களைக் கொண்ட சாதி, மத அமைப்புகள் நாடாளுமன்ற அராஜகத்தை மேலும் தீவிரப்படுத்தும். இந்த வகையில் மட்டுமே இதை நாம் வரவேற்கிறோம்.

ஆனால் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளுக்கெல்லாம் சரியான தீர்வு என்பதாகச் சொல்லி சாதி, மத அடிப்படையில் அரசியல் அணி திரட்டுவது - அணி சேர்ப்பது என்கிற அரசியல் போக்கு கடந்த பத்தாண்டுகளாகவே தீவிரமாக முடுக்கிவிடப்பட்டுள்ளது.

> மார்க்சியம் - லெனினியம் தியாகத்தையும் புரட்சியையும் அடிப்படையாக வலியுறுத்துகிறது. பெரியாரியமும் அம்பேத்கரியமும் தன்நலத்தையும் சமரசத்தையும் அடிப்படையாக வலியுறுத்துகின்றன.

சாதிய வேறுபாடுகள், முரண்பாடுகளை மூடிமறைத்து வைத்துவிட்டு, இந்துத்துவ தேசியம் என்கிற பெயரில் இசுலாமிய, கிறித்துவ சிறுபான்மையினருக்கு எதிராக மதவாத அரசியல் அணிதிரட்டலை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். கும்பல். ஆனால் ஆட்சியைப் பிடிப்பதற்குத் தேவையான ஆதரவைத் திரட்டும் முயற்சியில், மத ரீதியான அணி திரட்டல் அரைக்கிணறு தாண்டுவதுதான் என்பது நிருபிக்கப்பட்டுவிட்டது. சந்தர்ப்பவாத அரசியல், சாதிய அரசியலில் அது தஞ்சமடைந்தது. மேலும், மதரீதியிலான அணிதிரட்டுதல் ஒருபுறம் பாசிச பயங்கரவாதத்தையும் மறுபுறம் சிறுபான்மை மதவாதத்தையும் வளர்ப்பதாகவே அமைந்தது.

காங்கிரசு, பாரதீய ஜனதா ஆகிய பார்ப்பன - பனியா ஆளும் ஆதிக்க சாதிகளுக்கு எதிரானவை, மாற்றானவை என்பதாக இரண்டு அரசியல் போக்குகள் பத்தாண்டுகளுக்கு முன்பு, வி.பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணி ஆட்சிக் காலத்தில் எழுந்தன. அவை:

சமூக நீதியை முன்னிறுத்திய மண்டலிசம். மண்டல் கமிசன் பரிந்துரைகளை அமலாக்கியதன் மூலம் இட ஒதுக்கீடு மட்டுமல்ல, அதிகாரத்தில் உரிமைகோரும் சமூக நீதி உணர்வு பெற்றவர்களாக பிற்படுத்தப்பட்ட மக்களுடைய 'எழுச்சி'!

தலித் விடுதலையை முன்னிறுத்திய தலித்தியம். அம்பேத்கர் நூற்றாண்டு விழாக்களையும், அம்பேத்கர் தொகுப்பு நூல்களை வெளிக்கொணர்ந்ததை ஒட்டி, அம்பேத்கரியம் தலித்தியமாகப் பரிணமித்ததை ஒட்டி, தாழ்த்தப்பட்ட மக்களிடையே, குறிப்பாகத் தலித் இளைஞர்களிடையே ஏற்பட்ட 'எழுச்சி.'

அடுத்து வந்த, வரும் பல பத்தாண்டுகளுக்கு இந்த நாட்டின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகும் நிகழ்ச்சிப் போக்கு இவைதான் என்று பிரகடனப்படுத்தப்பட்டது.

மண்டலிசமும் - சமூக நீதியும் இட ஒதுக்கீடும் பெரியாரியத்தின் செயல்முறைதான் என்கிற முறையில் பெரியாரியத்தின் நாடுதழுவிய, ஏன் உலகளாவிய வெற்றியும் கூட என்று முரசறிவிக்கப்பட்டது.


''வர்க்கப் போராட்ட அணுகுமுறையும் தீர்வும் இந்த நாட்டுக்கு - மண்ணுக்குப் பொருந்தாதவை. இந்த நாட்டின் தனிச் சிறப்பான அம்சம், சமூகப் பிரச்சினை -



படிப்பகம்

www.padippakam.com

சாதியம். சாதியப் பிரச்சினையை முதன்மையான பிரச்சினையாக அடையாளங் கண்டு தீர்ப்பதில் கம்யூனிஸ்டுகளும், மார்க்சிஸ்டு - லெனினிஸ்டுகள் எனப்படும் நக்சல்பாரி இயக்கத்தினரும்கூட தோல்வி கண்டுவிட்டார்கள். இவற்றுக்கெல்லாம் பெரியாரியமும் அம்பேத்கரியமும்தான் தீர்வுகளை வைத்திருக்கின்றன'' என்று திடீர் தத்துவ ஆராய்ச்சியாளர்கள் பலர் முன்னிறுத்தினர்.



தமிழக முசுலீம் முன்னேற்றக் கழக மாநாட்டில் ஜெயா: இந்து மதவெறியர்களின் கரசேவையை ஆதரித்த ஜெயா, இப்பொழுது முசுலீம் மக்களின் காவலனாம்!

இவர்களுடைய வாதங்களுக்கு வலுச்சேர்க்கும் சான்றுகளாக இரண்டு நடப்புகள் அப்போது கிடைத்தன. ஒன்று, சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த முன்னாள் சோசலிச நாடுகளில் அடுத்தடுத்து ஆட்சிக் கவிழ்ப்புகள் நடந்து, அப்பட்டமான, ''மூல வடிவிலான'' முதலாளித்துவம் நிலை நாட்டப்பட்டது. இதையொட்டி ''கம்யூனிசத்தின் தோல்வி, ஜனநாயகத்தின் வெற்றி'' என்கிற ஏகாதிபத்தியப் பிரச்சாரம் உலகெங்கும் எதிரொலித்தது.

இரண்டு, ஆங்காங்கே பல சாதி மோதல்கள் நடந்து வடக்கிலும் தெற்கிலும் பல திடீர்த் தலைவர்கள் தோன்றி சாதி அமைப்புகளை நேரடியாகவும், அரசியல் கட்சிகளாகவும் புதுப்பித்தனர். லல்லு பிரசாத், முலயம் சிங், இராமதாசு போன்றவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களின் தலைவர்களாக, சமூக நீதிக் காவலர்களாகவும்; கன்ஷிராம், கிருஷ்ணசாமி, திருமாவளவன் போன்றவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களாக, தலித் விடுதலைப் போராளிகளாகவும் ஏற்றிப் போற்றப்பட்டனர்.

அயோத்தி - பாபரி மசூதி இடிப்பு, அதற்கு முன்னும் பின்னும் நடந்த இசுலாமியர் மீதான இந்து மதவெறிப் படுகொலைகளைத் தொடர்ந்து, வழக்கமான தலைமையிடமிருந்து வெளியேறியவர்கள் மக்கள் ஜனநாயகக் கட்சி, அல் உம்மா, ஜிகாத் கமிட்டி, ஜமாத் பேரவை, தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் போன்ற பல புதிய அமைப்புகளில் திரண்டனர். இவர்களைத் தமது நட்புச் சக்திகளாகக் கருதினார்கள், பெரியாரிய - அம்பேத்கரியவாதிகள்.

ஆகவே, மார்க்சிய - லெனினியவாதிகள் முன்வைக்கும் வர்க்க அடிப்படையிலான ஐக்கிய முன்னணிக்கு மாற்றாக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மதப்பிரிவு மக்கள் அடங்கிய ஐக்கிய முன்னணியே இந்திய நிலைமைகளுக்கு அவசியமானது என்று கண்டுபிடித்தார்கள்.

எங்காவது சாதி, மதக் ''கலவரங்கள்'' - சண்டைகள் நடந்தாலும் சரி; சமூக நீதிக் காவலர்கள், தலித் விடுதலைத் தலைவர்களுடன் எந்த மேடையில் தோன்றினாலும் சரி, பெரியாரிய, அம்பேத்கரிய சித்தாந்தவாதிகள் தமது அரசியல் கணிப்புகள், ஆராய்ச்சிகள் எல்லாம் நிரூபிக்கப்பட்டு வருவதாகப் பீற்றிக் கொண்டார்கள்.

அவர்கள் சொன்னபடி இப்போது ''சமூக நீதி கிட்டிவிட்டதா? தலித்துக்கள் விடுதலையடைந்து விட்டார்களா?'' என்று நாம் கேட்கவில்லை. அது அவ்வளவு எளிதானதோ விரைவானதோ அல்ல என்பது நமக்கும் தெரியும்.

ஆனால், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மதப்பிரிவு மக்களின் பிரதிநிதிகள் இவர்கள் தான் என்று அடையாளங்காட்டப்பட்ட அந்தத் ''தலைவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?''

''எதிர்வரும் பதிமூன்றாவது நாடாளுமன்றத் தேர்தல்களையொட்டி இவர்கள் உருவாக்கிவரும் கூட்டணிகள்தாம் சமூக நீதி, தலித் விடுதலை இலட்சியங்களை சாதிக்க உதவும் கூட்டணிகளா?'' என்பவைதாம் நமது கேள்வி.

**மார்க்சிய - லெனினிய வழிகாட்டுதல்களை - நெறிமுறைகளை விசுவாசத்தோடு கடைப்பிடித்ததால் போலி கம்யூனிஸ்டுகள் சீரழிவு - தோல்விகளை அடையவில்லை. தமது சொந்த நெறிமுறைகளை, வழிமுறைகளைக் கடைப்பிடித்துச் சீரழிந்து போனார்கள்.**

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சிறுபான்மை மக்கள் ஓர் அணியாகவும் அது பார்ப்பன - பனியா மற்றும் பிற ஆதிக்க சாதிகளுக்கு எதிரணியாகவும் உருவாகியிருந்தால் இவர்கள் பேசி வந்த பெரியாரியம், அம்பேத்கரியத்துக்குப் பொருத்தமாகவும் விசுவாசமாகவும் இருக்கும். அதற்கு மாறாக, இவர்கள் பார்ப்பன - பனியா மற்றும் பிற ஆதிக்க சாதிகளின், மதவெறியர்களின் இரு அணிகளில் ஏதாவது ஒரு பக்கம் திரண்டுள்ளனர். எந்த ஆதிக்க - ஆளும் சாதிகளை முறியடிப்பதாகச் சபதமெடுத்தார்களோ, அவற்றுக்கு ஊழியஞ் செய்பவர்களாக மாறி விட்டிருக்கிறார்கள்.

இவர்கள் எதிரெதிர் அணியில் நிற்கிறார்கள் என்பது மட்டுமல்ல; தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களை ஓரணியாகத் திரட்டுவதில் தோல்வி கண்டுவிட்டு விட்டார்கள் என்பது மட்டுமல்ல; ஒரே வகை சாதி, மத அமைப்புகளும் கூட இணக்கங்கண்டு ஒருங்கிணைக்க முடியாமல் எதிரெதிராக நிற்கிறார்கள். ஆதிதிராவிடர் பிரதிநிதிகளாகக் காட்டிக் கொள்ளும் திருமாவளவன் - பூவை. மூர்த்தி போன்றவர்களும், தேவேந்திரகுல வேளாளர் பிரதிநிதி என கூறிக் கொள்ளும் கிருஷ்ணசாமியும் எப்போதும் எதிரெதிராகவே நிற்கின்றனர். அதேபோலத்தான் வன்னிய, தேவர் சாதி அமைப்புகளும்; அதேபோலத்தான் தேசிய லீக்கும் முஸ்லீம் லீக்கும்.

தாங்கள் அரசியல் அமைப்பினர் அல்ல; சமுதாய இயக்கத்தவர் என்றும், நாற்காலிகளைக் குறிவைக்கும் தேர்தல் தங்கள் பாதையல்ல; எழுச்சியும் புரட்சியுமே தங்கள் வழிமுறை என்றும் சொல்லிக் கொண்டவர்கள், இறுதியில் தாமும் நாடாளுமன்றச் சாக்கடையில் படுத்துப் புரளும் பன்றிப் பிறவிகள் தாம் என்பதைக் காட்டி விட்டார்கள்.

முதலில் நாடாளுமன்றத் தேர்தலில் பங்கேற்போம், போட்டியிட மாட்டோம் என்பதும், பிறகு போட்டியிட்டாலும் தங்கள் அடிப்படை இலட்சியத்தைக் கைவிடவில்லை என்று சவடால் அடிப்பதும் இவர்களின் வாடிக்கை. தேர்தல் சாக்கடையில் குதித்த பிறகு அந்த சுகத்தில் மானம் - மரியாதை எல்லாம் மறந்து விடுவதும் வழக்கம்தான். தனக்குத் தலைவர் பட்டம் - அடைமொழி கிடைத்ததும், தமது எதிரிகள் என முன்பு அடையாளங்காட்டிய



படிப்பகம்

அதே பார்ப்பன - பனியா மற்றும் பிற ஆதிக்க சாதிகளின் பிரதிநிதிகளான அரசியல் கட்சிகளுடனேயே ஏதாவதொரு காரணத்தைக் கூறி கூட்டணி வைக்கிறார்கள். அதன்மூலம் அவர்கள் ஆட்சிக்கு வரத் துணை நின்றுவிட்டு, அடுத்த சில மாதங்களிலேயே, அந்த ஆட்சி தனது சமுதாயத்துக்கும் மக்களுக்கும் விரோதமான சர்வாதிகார ஆட்சி நடத்துவதாகக் குறை கூறி எதிரணிக்குப் பாய்வதும் கூட வாடிக்கையாகி விட்டது.

தனக்குத் தலைவர் பட்டம், அடைமொழியெல்லாம் வேண்டாம்; ''போராளி'' என்று சொல்லிக் கொள்வதிலேயே தாம் பெருமைப்படுவதாகச் சொன்னார், பா.ம.க. இராமதாசு. பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுடன் சேர்ந்ததும் அதுவரை மறைத்து வைத்திருந்த மூலகுணம் வெளிவந்துவிட்டது. இப்போது, ''தொழிலாளர்கள் போராடக் கூடாது, காய்கறி, பழம் சாப்பிட்டு ஆரோக்கியமாக உழைத்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும்'' என்று உபதேசிக்கிறார். ''ஒரிசாவில் பாதிரியாரும் அவரது இரு மகன்களும் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டது எதிர்க்கட்சிகளின் சதி'' எனக் கூறி இந்து மத வெறி பாசிசத்துக்கு வக்காலத்து வாங்குகிறார். பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலிடம் விசுவாசம் காட்டுவதில் இராமதாசை விஞ்சிவிடத் துடிக்கிறார் வைகோ.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களின் பெயரால் சவடால் அடித்து வளர்ந்த பிறகு, துரோகிகளாகிவிடும் பெரியாரிய, அம்பேத்கரியவாதிகளுக்கு வகை மாதிரிதான் இராமதாசும், வைகோவும். இந்த வரிசையில் புதிதாக இணைந்திருப்பவர்கள்தாம் கிருஷ்ணசாமி, திருமாவளவன், ஜெயனுல்லாபுதீன் போன்றவர்கள். விரைவில் இவர்கள் சாயம் வெளுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

''நம்ம சாதிக்காரர்களை ஏமாற்றி ஓட்டு வாங்கிக் கொண்டு போன அரசியல்வாதிகள் தங்கள் சுயநலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நம்ம சாதிக்காரர் தலைமையில் தனிச் சங்கமாகத் திரண்டால்தான் நமக்கு நல்லது'' என்று பேசி வந்த சாதித் தலைவர்கள் என்ன செய்கிறார்கள்? அந்தந்த சாதிகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களைப் புறக்கணித்துவிட்டு, தனது குடும்பத்திற்கும் தன்னைச் சுற்றியுள்ள சிறு கும்பலுக்கும் வசதி தேடிக் கொள்கிறார்கள்.

''தாழ்த்தப்பட்ட இளைஞர்களைப் பலிகொடுத்து நக்சல்பாரித் தலைவர்கள் ஆதாயம் அடைகிறார்கள்'' என்று அவதூறு பேசுவதையும் இந்த இயக்கத்தில் சேருவதைத் தடுப்பதுமே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிறார்கள். ''தலித்துக்களின் கஷ்டங்களைத் தலித்துக்களால்தான் புரிந்து கொள்ள முடியும், ஆகவே பாட்டாளி வர்க்கத் தலைமை கூடாது; தலித் தலைமைதான் சரியானதாக இருக்கும்'' என்று பேசிவரும் ''தலித் தலைவர்கள்''தாம் உண்மையில் சுயநலம், ஆதாயம் தேடுபவர்களாகச் சீரழிந்து போகிறார்கள்.

''இந்த நாட்டின் கம்யூனிஸ்டு கட்சிகளின் சீரழிவு, சீனா மற்றும் சோவியத் ஒன்றியத்தில் முதலாளித்துவ மீட்சி ஆகியவற்றுக்கு தலைமையின் தவறுகள்தான் காரணம், அவை மார்க்சிய - லெனினியத்தின் வீழ்ச்சி - தோல்வியைக் குறிக்காது என்று சொல்லுகிறார்கள். அதுபோலத்தான் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதி அரசியல் தலைவர்கள், அமைப்பகளின் சீரழிவுகளுக்கு பெரியாரியம் - அம்பேத்கரியத்தைக் குறை கூற முடியாது'' என்று சிலர் வாதாடுகின்றனர்.



கு.ப. கிருஷ்ணன் (இடது) தொடங்கியுள்ள ''தமிழர் பூமி'' மாநாட்டில் பா.ஜ.க. தலைவர் இல. கணேசன்: முத்தரையர் சாதி ஓட்டுக்களுக்கு வீசப்படும் வலை.

அது அப்படியல்ல. இவையெல்லாம் ஏதோ சில தலைவர்கள், அமைப்புகளின் சீரழிவை மட்டும் குறிக்கவில்லை. பெரியாரியம், அம்பேத்கரியத்தின் வீழ்ச்சி - தோல்வியைத்தான் குறிக்கின்றன. ஏனென்றால் மார்க்சிய - லெனினிய வழி காட்டுதல்களை - நெறிமுறைகளை விசுவாசத்தோடு கடைப்பிடித்ததால் போலி கம்யூனிஸ்டுகள் சீரழிவு - தோல்விகளை அடையவில்லை. அதன் அடிப்படைகளைத் திரித்துப் புரட்டி, தமது சொந்த நெறிமுறைகளை, வழிமுறைகளைக் கடைப்பிடித்துச் சீரழிந்து போனார்கள்.

ஆனால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதி அரசியல் தலைவர்கள், தமது சொந்த வழிமுறைகள், நெறிமுறைகள் எதையும் வகுத்துக் கொண்டு செயல்படவில்லை. பெரியாரியம், அம்பேத்கரியத்தை, அவற்றின் வழிமுறைகள் - நெறிமுறைகளைத் தவறாது விசுவாசத்தோடு கடைப்பிடிக்கிறார்கள். மார்க்சியம் - லெனினியம் தியாகத்தையும் புரட்சியையும் அடிப்படையாக வலியுறுத்துகிறது. பெரியாரியமும் அம்பேத்கரியமும் தன்நலத்தையும் சமரசத்தையும் அடிப்படையாக வலியுறுத்துகின்றன.

இசுலாமியரைப் பார்ப்பனரோடு சேர்த்து சிறுபான்மை ஆதிக்கம் புரிபவர்களாக மதிப்பிட்ட பெரியார், ''காங்கிரசுடன் பேரம் பேசி அம்பேத்கர் தன் சாதி நலன்களை ஈடேற்றிக் கொண்டார். சூத்திரர்களாகிய பிற்படுத்தப்பட்டவர்களுக்குத்தான் ஒன்றுமில்லாமல் போய்விட்டது'' என்று சொன்னார். ''மற்ற சமுதாயத்தினருக்காக நான் எதுவும் செய்ய முடியாது; எங்கள் சமுதாயம் பலவீனமானது; எங்கள் சமுதாயம் வரையிலான பிரச்சினைகளை மட்டும்தான் நான் பார்க்க முடியும்'' என்று குறுக்கிக் கொண்டார் அம்பேத்கர். ஆனால் பெரியாரும் அம்பேத்கரும் சீர்திருத்த வாதிகளாகவும், நேர்மையானவர்களாகவும் இருந்தனர். இன்றைய பெரியாரிய - அம்பேத்கரியவாதிகளைப் போல பிழைப்புவாதிகளாகச் சீரழிந்து விடவில்லை.

இருவருமே தமக்காகவோ, மற்றவருக்காகவோ ஆளுவோரிடம் போராடி, புரட்சி செய்து, உரிமையைப் பெறும் வழிமுறைகளைச் சொல்லவில்லை; சமாதான, சமரச வழிகளில் இட ஒதுக்கீடு; சமூக நீதிக் கொள்கைகள் மூலம் கல்வி மற்றும் அரசு பதவிகள் பெற்று தனிநபர்கள், குடும்பங்கள் பொருளாதார ரீதியில் முன்னேறுவதையும், அதற்காக ஆளுவோருக்குள்ளாகவே உடன்பாடான சக்திகளுடன் ஐக்கியப்பட்டு நிற்பதையே வலியுறுத்தினர். இப்படிப்பட்ட சமரச, சுயநலக் கொள்கையைத்தான் போலிக் கம்யூனிஸ்டுகள் வழிமுறையாகவும் நெறிமுறையாகவும் கொண்டுள்ளனர்; மார்க்சிய - லெனினியத்தை அல்ல.

ஆகவே, பிற்படுத்தப்பட்டோரின் ''சமூக நீதி'' இயக்கமும், தாழ்த்தப்பட்டோரின் ''தலித் விடுதலையும்'' வெறும் கனவாகிப் போனது. நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே பெரியாரியமும் அம்பேத்கரியமும் எந்தத் தீர்வும் சொல்லவில்லை. அதன் பிரதிநிதிகள் பார்ப்பன - பனியா மற்றும் பிற ஆதிக்க சாதிகளின் தலைமையில் அணி சேர்ந்திருப்பது தற்காலிகமாக வந்து போகும் அரசியல் நிகழ்வு அல்ல; ''சமூக நீதி''க்கும் ''தலித் விடுதலை''க்கும் நேர்ந்துள்ள நிரந்தர வீழ்ச்சிதான்.

● ஆ. க.

www.padippakam.com

தலையங்கம் தொடர்ச்சி

உள்ளது. அதேபோல ஆட்சியாளர்களின் இலஞ்ச - ஊழல் - அதிகார முறைகேடுகளில் உடந்தையாக இருந்து, பங்கு பெறுவதே அதிகாரிகள் - போலீசின் வாடிக்கையாக உள்ளது. இந்த விவகாரத்திலும், நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழையவும் சூழ்ந்து கொண்டு போலீசைத் தாக்கவும் பேரணியினர் முயன்றதாகவும், குறைந்தபட்ச போலீசு நடவடிக்கையால் கலைந்து ஓடியவர்கள், தாமே ஆற்றில் குதித்து மாண்டதாகவும் கதை விடுகிறார், கருணாநிதி. ஒரு பெண் தன் இரண்டு வயதுக் குழந்தையையும் தாயையும் இழுத்துக் கொண்டு ஆற்றில் குதிப்பதற்கு அவள் பைத்தியக்காரியா? போலீசு தாக்குதலால் உயிர் போகும் என்ற பயம் ஏற்படாமல் நீச்சல் தெரியாதவர்கள் யாராவது ஆற்றில் குதிப்பார்களா? ஆகவே, இறந்து போனவர்கள் போலீசின் தடியடி, கல்வீச்சால் மரண காயமடைந்துதான் நீரில் மூழ்கிப் போனார்கள். அதை நிரூபிப்பதற்கு மறு பிரேதப் பரிசோதனை கோரியதை நிராகரித்து, சவ அடக்கம் செய்து சாட்சியத்தை அழிப்பதற்கு கருணாநிதி அரசு உத்தரவிட்டிருக்கிறது.

வெறும் மனு கொடுக்கப் போனவர்கள் மீது கொலை வெறித் தாக்குதல் தொடுத்தும், மறு பிரேதப் பரிசோதனை நடத்தக் கோரி கோட்டை முன் உண்ணாவிரதம் அறிவித்ததற்கு போலீசைக் கொண்டு மிரட்டி, விரட்டியும் போலீசு பயங்கரவாதத்தை ஏவிவிட்டிருக்கிறார் கருணாநிதி. இந்த உரிமைகள்கூட மறுக்கப்பட்டால், நாளை தொழிலாளர்கள், மக்கள் உயிர் வாழும் உரிமைகூடப் பறிக்கப்படுவதைத் தடுக்க முடியாது.

போலீசு அதிரடிப்படை இவ்வளவு கொலை வெறியுடன் தாக்கியிருப்பதற்கு கருணாநிதி - ஆலடி அருணா போன்ற அரசு உயர்மட்டத்தில் இருந்தே உத்திரவு வந்ததா? தேயிலைத் தோட்ட முதலாளிகள் எலும்புத் துண்டுகளைப் போட்டு ஏவினாரா? இரண்டுமே இல்லை, அதிகாரிகளும் போலீசும் தாமாகவே இப்படிச் செயல்பட்டனர் என்றால், உண்மையில் அவர்கள் கொலை வெறிபிடித்த மனநோயாளிகள் என்றாகிறது. 1967 தேர்தலில் தி.மு.க. வென்று ஆட்சியைப் பிடித்ததற்கு முக்கியமான பிரச்சாரங்களில் ஒன்று, ''கூலி உயர்வு கேட்டான் அத்தான், குண்டடிபட்டுச் செத்தான்'' என்ற சுவரொட்டி பிரச்சாரம். அன்றைய காங்கிரசு ஆட்சியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளியை, அவர் மனைவி கட்டிப் பிடித்துக் கதறும் காட்சியைக் கொண்டிருந்தது அந்தச் சுவரொட்டி. முதலாளிக்கு விசுவாசமாகி, தொழிலாளர்களைப் படுகொலை செய்வதில் காங்கிரசோ, திராவிடக் கட்சியோ - இரண்டுக்குமே வேறுபாடு கிடையாது என்று மீண்டும் ஒருமுறை நெல்லை சம்பவம் காட்டி விட்டது.

# பார்ப்பன தினமணியின் அவதூறு

''கார்கில் போர் என்பது இந்தியா - பாகிஸ்தான் ஆளுங்கும்பல்கள் காஷ்மீர் மீது தொடுத்துள்ள ஆக்கிரமிப்பு போர்'' என்பதை அம்பலப்படுத்தியும், காஷ்மீரமக்களின் சுய நிர்ணய உரிமையை ஆதரித்தும் கோவை பகுதி தோழர்கள் ஏகலைவன், பாலமுருகன் சுவரொட்டிகளை ஒட்டிய பொழுது கைது செய்யப்பட்டு, பின்னர் இரு தினங்கள் கழித்து, 16.6.99 அன்று பிணையில் விடுவிக்கப்பட்டனர். இது தொடர்பாக 17.6.99 அன்று செய்தி வெளியிட்ட தினமணி (கோவை பதிப்பு), தோழர்கள் இருவரும் ஆபாச சுவரொட்டி ஒட்டும் பொழுது கைது செய்யப் பட்டதாகவும், அவர்களிடமிருந்து 100 ஆபாச சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டதாகவும் உண்மையைத் திரித்துப் புரட்டி அவதூறு செய்து, தனது பார்ப்பன புத்தியைக் காட்டிக் கொண்டது.

> **100 ஆபாச சுவரொட்டிகள் பறிமுதல்: 2 பேர் கைது**
>
> கோவை, ஜூன் 16—
>
> கோவை கணபதி அருகே திங்கள் கிழமை ஆபாச சுவரொட்டி ஒட்டியதாக இருவர் கைது செய்யப்பட்டனர். போலீசார் திங்கள்கிழமை இரவு கணபதி பகுதியில் ரோந்துப் பணி மேற்கொண்டனர். அப்போது காவல்துறை அனுமதியின்றி பிள்ளையார் கோயில் பின்புறம் சுவரொட்டி ஒட்டிய ஏகலைவன் (22), பாலமுருகன் (24) ஆகியோர் பிடிபட்டனர். அவர்களிடமிருந்து 100 ஆபாச சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டன.

கோவை பகுதி தோழர்கள், ''இந்த அவதூறு செய்திக்கு உடனடியாகத் திருத்தம் வெளியிட வேண்டும்; இல்லையென்றால் தினமணி ஆசிரியர் மீதும், வெளியீட்டாளர் மீதும் கிரிமினல் வழக்கும், மான நஷ்ட வழக்கும் தொடுக்கப்படும்'' என எச்சரித்து, தாக்கீது அனுப்பினர். இதன்பின், 18.6.99 தினமணியில், தனது தவறை ஒத்துக் கொண்டு, உண்மைச் செய்தியை வெளியிட்டது.

தகவல்: ம.க.இ.க., கோவை.

# ஆர்.எஸ்.எஸ்.இன் நயவஞ்சக சேவைக்கு தி.மு.க.வின் பாதுகாப்பு

ஆர்.எஸ்.எஸ்.-இன் துணை அமைப்பான சேவா பாரதி, தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் நிறைந்த சென்னை - சேத்துப்பட்டு பகுதியில் கடந்த பிப்ரவரி மாதம் மருத்துவ முகாம் நடத்த முயன்றபொழுது, ம.க.இ.க.வும், பெரியார் திராவிடர் கழகமும் இணைந்து, அதன் நயவஞ்சக சேவையை மக்கள் முன் அம்பலப்படுத்தி, முகாம் நடத்த முடியாமல் துரத்தியடித்தனர்.

தற்பொழுது இப்பகுதியில் எப்படியாவது மருத்துவ முகாமை நடத்தி, அதன் மூலம் ஆள் பிடித்து, ஆர்.எஸ்.எஸ்.-இன் கிளையைக் கட்டிவிட வேண்டும் என்பதற்காக தி.மு.க.வைத் துணைக்கு அழைத்துக் கொண்டது, இந்து மதவெறிக் கும்பல். சேவா பாரதியின் மருத்துவ முகாமிற்கு, தாழ்த்தப்பட்டவரான தி.மு.க. துணை சபாநாயகர் பரிதி இளம்வழுதி சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்தார். ம.க.இ.க. தோழர்கள் இந்த மருத்துவ முகாமைக் கண்டித்தும், தாழ்த்தப்பட்டோர் மீது பா.ஜ.க. பொழியும் திடீர் பாசத்தை அம்பலப்படுத்தியும் சுவரொட்டிகள் ஒட்டினர். மேலும், 15.7.99 அன்று இப்பிரச்சினையையொட்டி சேத்துப்பட்டு அம்பேத்கர் திடலில் தெருமுனைக் கூட்டம் நடத்தினர். இத்தெருமுனைக் கூட்டத்தில் பெரியார் திராவிடர் கழகமும் பங்கெடுத்துக் கொண்டது. இத்தெருமுனைக் கூட்டத்தில், சேத்துப்பட்டு பகுதியில் ஆர்.எஸ்.எஸ். கிளை கட்ட முயலும் இந்து மதவெறியர்களின் 'சேவை'களும், அதற்கு தி.மு.க. சோரம் போனதும் அம்பலப்படுத்தப்பட்டது.

தகவல்:
ம.க.இ.க.,
சென்னை - சேத்துப்பட்டு.



படிப்பகம்

www.padippakam.com



## பன்னாட்டு நிறுவனங்களுக்கு பா.ஜ.க.வின் பாதசேவை

பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்குப் பாதசேவை செய்வதில், இதுவரையிலான எல்லா ஆட்சிகளையும் பா.ஜ.க. ஆட்சி விஞ்சிவிட்டது. பன்னாட்டு பூதாகர தொழிற்கழகங்கள் இந்தியாவில் எவ்விதத் தடையுமின்றிச் சூறையாடுவதற்கு இடையூறாக இருந்த பெயரளவிலான கட்டுப்பாடுகளையும் அண்மையில் பா.ஜ.க. இடைக்கால பொறுப்பு அரசு நீக்கிவிட்டது.

தற்போது இந்தியத் தரகுப் பங்காளிகளுடன் கூட்டுச் சேர்ந்து இயங்கிவரும் பன்னாட்டு நிறுவனங்கள், இனி தமது நேரடிக் கிளை நிறுவனத்தைச் சுதந்திரமாக நிறுவிக் கொள்ளலாம் அல்லது தமது ஆளுமையின் கீழான புதிய கூட்டுப்பங்கு நிறுவனத்தைத் தொடங்கிக் கொள்ளலாம். இப்படித் தொடங்கிக் கொள்ள இந்தியப் பங்காளி நிறுவனத்திடம் ஒப்புதல் சான்றிதழ் (NOC) பெற வேண்டும் என்ற விதி இருந்தது. தற்போது அதையும் பா.ஜ.க இடைக்கால அரசு நீக்கிவிட்டது.



இதற்கு முன்பு கூட்டுப்பங்கு நிறுவனங்கள் தயாரிக்கும் ஓர் உற்பத்திப் பொருளைப் பன்னாட்டு நிறுவனங்கள் இங்கு தனியாக தயாரிக்க முடியாது. இப்போது அந்த அற்ப உரிமையும் பறிபோய் விட்டது. உதாரணமாக, டி.வி.எஸ். நிறுவனமும் ஜப்பானின் சுசுகி நிறுவனமும் கூட்டுச் சேர்ந்து "டி.வி.எஸ். சுசுகி" என்ற பெயரில் 100 சிசி இரக மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்கின்றன. இதையும் "சுதேசி" என்றே எல்லா ஓட்டுக் கட்சிகளும் குறிப்பிடுகின்றன. இனி புதிய விதிகளின்படி, அதே சுசுகி நிறுவனம் பஜாஜ் போன்ற இந்தியப் பங்காளியுடன் சேர்ந்து அதே இரக மோட்டார் சைக்கிளை, கொள்ளவு - கனபரிமாணத்தில் மட்டும் சிறிது மாற்றம் செய்து 102 சிசி இரக மோட்டார் சைக்கிள்களாக உற்பத்தி செய்ய முடியும்; அல்லது நேரடியாக சுசுகி நிறுவனமே தனது கிளையை நிறுவி, "டி.வி.எஸ் - சுசுகி" மோட்டார் சைக்கிளை வெறும் "சுசுகி" என்று தனியே உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

இந்தியாவில் மாருதி உத்யோக், ஹீரோ - ஹோண்டா, சிறீராம் - ஹோண்டா, பிர்லா - யமஹா, மோடி - ஜெராக்ஸ், டி.வி.எஸ். - சுசுகி என ஏறத்தாழ 1250 கூட்டுப்பங்கு நிறுவனங்கள் உள்ளன. பெட்ரோலியம், இரசாயனம், மின்னணு, தொலைத் தொடர்பு, கனரக உற்பத்தி என இந்தியத் தொழிற்துறை முழுவதையுமே இவை கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்தியப் பங்காளிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள யமஹா, ஹோண்டா, சுசுகி போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் புதிய சலுகைகளை கொண்டு தனியாக தனது கிளை நிறுவனத்தைத் தொடங்கினாலோ, வேறு புதிய கூட்டுப்பங்கு நிறுவனத்தைத் தொடங்கினாலோ, ஏற்கனவே உள்ள கூட்டு நிறுவனங்களின் உற்பத்திக்குச் சந்தையின்றி நட்டமடைய நேரிடும். இவற்றில் பணியாற்றும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்க நேரிடும். இக்கூட்டுப் பங்கு நிறுவனங்களில் முதலீடு செய்துள்ள பங்குதாரர்களும், வங்கிகள் - நிதி நிறுவனங்களும் நட்டமடைந்து திவாலாகும் நிலை ஏற்படும்.

தொழிலதிபர்களைக் கலந்தாலோசிக்காமல் பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சாதகமாக பா.ஜ.க அரசு அவசர முடிவு எடுத்துள்ளது என்று தரகுப் பெருமுதலாளிகளின் ஒரு பிரிவாகிய இந்தியத் தரகு பெரு முதலாளிகள் சங்கம் (FICCI) கண்டனம் தெரிவித்துள்ளது. மரபுகள், விதிமுறைகளை மீறி எவ்வித விவாதமுமின்றி ஓர் இடைக்கால பொறுப்பு அரசு இப்படியொரு முக்கியமான கொள்கை முடிவை அறிவிக்கக் கூடாது என்ற ஒரு பிரிவு தரகுப் பெரு முதலாளிகள் புலம்புகின்றனர்.

ஒருபுறம் இந்தியாவின் ஒரு பிடி மண்ணைக் கூட அந்நியருக்கு விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று தேசிய வெறியூட்டி கார்கில் போர்; மறுபுறம், அந்நிய ஏகபோக நிறுவனங்களுக்கு நாட்டை விற்பதில் முன்னணிச் சேவை - இதுதான் 'தேசபக்த' நாடகமாடும் இந்துவெறி பாசிஸ்டுகளின் உண்மை முகம்!.

## முடிவெட்டிக் கொள்ளவும் தடை தொடரும் தீண்டாமைக் கொடுமை

தீண்டாமையை சட்டபூர்வக் குற்றமாக அறிவிக்கும் அரசு விளம்பரங்கள், சமத்துவபுர சதிராட்டங்கள் என கேலிக் கூத்துக்கள் தொடரும் அதேசயம், தமிழகத்தின் கிராமப் புறங்களில் சாதிய ஒடுக்குமுறையும் தீண்டாமையும் கேள்விமுறையின்றித் தொடர்கின்றன. தஞ்சையை அடுத்துள்ள திருக்காணூர்பட்டி எனும் கிராமமே இதற்குச் சான்றாக உள்ளது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் வாழும் இக்கிராமத்தில் மேல்சாதியினரான உடையார்களின் ஆதிக்கமே கோலோச்சுகிறது. தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தேநீர் குவளை, பொது இடங்களில் நுழையத் தடை, உள்ளூர் உணவு விடுதிகளில் பெஞ்சுகளில் அமர்ந்து உணவருந்தத் தடை என்று தீண்டாமைக் கொடுமை தொடர்ந்து நீடிக்கிறது. தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் உள்ளூர் முடி திருத்தகங்களில் முடிவெட்டிக் கொள்ளக்கூட உரிமை கிடையாது. அவர்கள் தஞ்சை அல்லது வல்லம் நகருக்குச் சென்றுதான் முடிவெட்டிக் கொள்கின்றனர். தாழ்த்தப்பட்டோர் மட்டுமல்ல; இக்கிராமத்தில் வாழும் பிற்பட்ட சாதியினரான முத்தரையர்களுக்கு முடிதிருத்தகங்களில் தனிக்கத்தி, துண்டு, சோப்பு, சீப்புகள் வைக்கப்பட்டு, சாதிவெறியர்களால் இழிவுபடுத்தப்படுகின்றனர்.

இக்கிராமத்தில் நீடிக்கும் இரட்டை தேநீர்க் குவளை பற்றி அரசுக்குப் புகார்கள் அனுப்பப்பட்டதும், போலீசார் இக்கிராமத்துக்கு வந்து தாழ்த்தப்பட்டோர் யாராவது வழக்கு மன்றத்தில் சாட்சி சொல்ல வருமாறு அழைத்தனர். ஆனால் தாழ்த்தப்பட்டோர் எவரும் இதற்கு முன்வரவில்லை. உடையார் சாதிவெறியர்களின் அடக்குமுறை பற்றிய அச்சமே இதற்குக் காரணம்.



படிப்பகம்

www.padippakam.com



பின்னர், மீண்டு புகார்கள் வந்ததும் வட்டாட்சியர், வருவாய்த்துறை அதிகாரிகள் முன்னிலையில் சமாதானக் கமிட்டி நிறுவப்பட்டு, பயன்படுத்திய பின் வீசியெறியும் பிளாஸ்டிக் குவளை முறையைக் கொண்டு வந்தனர். இருப்பினும், உடையார் சாதிவெறியர்களின் அச்சுறுத்தலால், அடுத்த சில நாட்களிலேயே மீண்டும் இரட்டைக் குவளை முறையே நிலைநாட்டப்பட்டது.

தொடரும் இத்தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து கடந்த ஜூலை முதல் வாரத்தில் 'மார்க்சிஸ்டு' கட்சியினர் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். அதைத் தொடர்ந்து, இக்கிராமத்துக்கு வந்த போலீசார் தேநீர்க்கடைகளில் இரட்டைக் குவளை முறை கூடாது என்று எச்சரித்துவிட்டு, சில கண்ணாடிக் குவளைகன்ள உடைத்தெறிந்து விட்டுச் சென்றனர். ஆனாலும் ஆதிக்க சாதி வெறியர்கள் எவரையும் கைது செய்யவில்லை. இதன் பிறகு மீண்டும் இக்கிராமத்தில் இரட்டைக் குவளை முறையே தொடர்கிறது.

ஆதிக்க சாதிவெறியர்களின் கையில் அரசியல் அதிகாரம் உள்ள வரையில் காகிதத்தில் உள்ள வன்கொடுமைச் சட்டத்தாலோ, இட ஒதுக்கீட்டுச் சலுகைகளாலோ, சமத்துவபுரக் கூத்துக்களாலோ தாழ்த்தப்பட்டோர் மீதான சாதிவெறி அடக்குமுறையைத் தகர்த்தெறிய முடியாது. அரசியல் அதிகாரத்துக்கான புரட்சி இல்லாமல் தீண்டாமைக் கொடுமைக்கு முடிவு கட்டவும் முடியாது. இந்த உண்மையை திருக்காணூர்பட்டி விவகாரமே நிரூபித்துக் காட்டுகிறது.

## சாதிவெறியர்களால் புதைக்கப்படும் ''சமத்துவ மயான''த் திட்டம்

அனைத்துச் சாதியினரும் குடியிருக்கும் சமத்துவபுரங்களை உருவாக்கி சாதி வேற்றுமைகளை ஒழித்து வருவதாகப் பம்மாத்து செய்து வரும் தி.மு.க அரசு, அனைத்துச் சாதியினருக்கும் பொதுவான ''சமத்துவ மயானம்'' அமைக்க கிராமப் பஞ்சாயத்துகள் முன்வந்தால், அவற்றுக்கு ஒரு இலட்ச ரூபாய் நிதியுதவி செய்வதாக அண்மையில் அறிவித்துள்ளது. இதற்கென தமிழக அரசு ரூ. 1 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் மேலும் ரு 10கோடி ஒதுக்க மாநில அரசு முயற்சித்து வருவதாகவும் உள்ளூராட்சி அமைச்சர் கோ.சி. மணி அறிவித்துள்ளார்.

இதன்படி, அனைத்துச் சாதியினரும் பாகுபாடின்றி பொது இடுகாட்டில் பிணங்களைப் புதைக்கவும், சுடுகாட்டில் எரிக்கவும் ஒப்புதல் அளித்து கிராமப் பஞ்சாயத்துகள் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அத்தீர்மானத்தை மாவட்ட நிர்வாகத்துக்கு அனுப்ப வேண்டும். அதை மாவட்ட நிர்வாகம் பரிசீலித்து அக்கிராமப் பஞ்சாயத்துக்கு ''சமத்துவ மயானம்'' அமைக்க ஒரு இலட்ச ரூபாய் வழங்கும்.

ஆனாலும், இன்றுவரை எந்த பஞ்சாயத்திலும் ''சமத்துவ மயானம்'' அமைக்கும் தீர்மானம் நிறைவேறவில்லை. அந்த அளவுக்கு பஞ்சாயத்துகளில் மேல்சாதி ஆதிக்கம் புரையோடிப் போயுள்ளது. பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ள பெரிய திருக்கோணம் கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் இதுபற்றி பேசிய போது ஏற்றுக் கொண்டுவிட்டு, பிறகு ஆதிக்க சாதிகளின் நிர்பந்தத்தால் தீர்மானத்தைக் கிடப்பில் போட்டனர். எருத்துக்காரன் பட்டியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவித்த போதிலும், மாவட்ட நிர்வாகத்துக்கு இதுவரை எந்தத் தகவலும் வரவில்லை. இதர மாவட்டங்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்கே சமத்துவ மயானங்களுக்கு ஒப்புதல் கிடைத்துள்ளதாகச் செய்திகள் வருகின்றன.

தமிழகத்தில் ஏறத்தாழ 14,000 கிராமப் பஞ்சாயத்துகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவற்றில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குச் சுடுகாடோ, சுடுகாட்டுப் பாதையோ கிடையாது. இதை ஒட்டி பலமுறை சாதிய மோதல்கள் நடந்துள்ளன. ஆதிக்க சாதி வெறியர்களின் கொட்டத்தை ஒடுக்கி, கிராமச் சுடுகாட்டில் தாழ்த்தப்பட்டோருக்கு உரிமையை நிலைநாட்டுவதற்குப் பதிலாக, தனியாக சமத்துவ மயானம் அமைக்க கோமாளித்தனமாக தி.மு.க. அரசு கிளம்பியுள்ளது. ஆனால், அதையும்கூட சகித்துக் கொள்ளாமல், ஆதிக்க சாதிவெறியர்கள் கிராமப் பஞ்சாயத்துகளை ஆட்டிப் படைக்கின்றனர்.

## லாட்டரி மாஃபியாக்களின் பல்லாயிரங்கோடி பகற்கொள்ளை

மகாராஷ்டிராவின் காலணி ஊழல், பீகாரின் மாட்டுத் தீவன ஊழல், ஜெயா - சசிகலா கும்பலின் பகற்கொள்ளை முதலான அனைத்தையும் விஞ்சிவிடும் அளவுக்கு, பல்லாயிரங் கோடி அளவுக்கான லாட்டரி மோசடி அண்மையில் அம்பலமாகியுள்ளது.




தமிழகத் தொழிலாளர்களை மோசடி செய்து சுரண்டி வரும் பலவித லாட்டரிகள் (உள்படம்) லாட்டரி மாஃபியா மணிக்குமார் சுப்பா.

நாகாலாந்து மாநில லாட்டரி உட்பட வடகிழக்கிந்திய மாநில லாட்டரிகள் சிலவற்றை நடத்தி வந்தவனும், முன்னாள் காங்கிரசு எம்.பி.யும், ''லாட்டரி கிங்'' என அழைக்கப்பட்டவனுமாகிய மணிக்குமார் சுப்பா என்பவன் குறைந்தபட்சம் ரூ. 10,000 முதல் ரூ. 24,000 கோடி வரை மோசடி செய்து ஏய்த்துள்ளதாக மத்திய அரசின் தலைமை தணிக்கை அதிகாரி அலுவலகம் குற்றம் சாட்டியுள்ளது. இதையொட்டி வருமான வரித்துறை அதிகாரிகள் இவனது பங்களா, அலுவலகம் உள்ளிட்ட 35 இடங்களில் சோதனை நடத்தி வருகின்றனர். மையப் புலனாய்வுத்துறை (சி.பி.ஐ.) தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

மணிக்குமார் சுப்பாவின் ''எம்.எஸ். அசோசியேட்ஸ்'' நிறுவனம் நாகாலாந்து மாநில லாட்டரியின் மொத்தக் குத்தகைதாரராக இயங்கி வருகிறது. 1993 முதல் 1997 வரை இந்நிறுவனம் 83,254 குலுக்கல்களை நடத்தியுள்ளது. ஆனால், குலுக்கல்களில் பரிசு விழுந்தவர்களுக்கு பரிசுத் தொகையை வழங்கியதற்கான கணக்குகளை இந்நிறுவனம் இதுவரை காட்டவில்லை. மொத்தப் பரிசுத் தொகையான ரூ. 15,194 கோடியில் ரூ. 3,000 கோடிக்கு மட்டுமே அரைகுறையாக கணக்குகள் உள்ளன. எஞ்சிய அனைத்தும் ஏப்பம் விடப்பட்டுள்ளன.

மேலும் 1997-ஆம் ஆண்டில் ஒரு நம்பர் லாட்டரிக்கு அரசு தடை விதித்திருந்த போதிலும், அதை மீறி 469 குலுக்கல்களை நடத்தி முறைகேடாக ரூ. 2,000 கோடிக்கும் மேல் சுப்பா கும்பல் சுருட்டியுள்ளது. பரிசுத் தொகைளுக்கான வருமான வரியாக மாநில அரசுக்குச் செலுத்த வேண்டிய ரூ. 59 கோடியில் ரூ. 5 கோடியை மட்டுமே இந்நிறுவனம் செலுத்தியுள்ளது. இப்படிப் பல வழிகளில் மணிக்குமார் சுப்பா கும்பல் பல்லாயிரங் கோடி ரூபாய்



படிப்பகம்

www.padippakam.com



களை விழுங்கி ஏப்பம் விட்டுள்ளது. போதாக்குறைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் இவனுக்கு கடந்த இரு ஆண்டுகளாக சிறப்புக் காவல்படை பாதுகாப்பும் அளித்து வந்துள்ளது.

இந்த மோசடிகள் அனைத்தும் ஜமீர் தலைமையிலான காங்கிரசு அரசு நாகாலாந்தில் ஆட்சி செய்த காலத்தில்தான் நடந்துள்ளன. அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், கிரிமினல்களின் கூட்டோடு லாட்டரி மன்னர்கள் பல்லாயிரங் கோடியைச் சுருட்டியுள்ளனர் என்று தலைமை தணிக்கை அதிகாரி அலுவலகமே குற்றம் சாட்டி, மத்திய அமைச்சரவை அலுவலகத்துக்கு அறிக்கை அனுப்பியுள்ளது. லாட்டரி சூதாட்டத்தால் யார் கோடீசுவரர்களாக வளர்ந்தார்கள் என்பதையும், "விழுந்தால் வீட்டுக்கு; இல்லையேல் நாட்டுக்கு!" என்பதெல்லாம் எவ்வளவு பெரிய மோசடி என்பதையும் இந்த விவகாரம் நிரூபித்துக் காட்டுகிறது.

உண்மைகள் இவ்வாறிருக்க, லாட்டரி சூதாட்டத்தைத் தடை செய்தால் அதை நம்பி பிழைத்துவரும் பல இலட்சம் பேர் பாதிக்கப்படுவார்கள் என்று மாநில அரசுகள் எதிர்வாதம் செய்து, உழைக்கும் மக்களைக் கொள்ளையிடும் லாட்டரி சூதாட்டத்தைத் தொடர்கின்றன. லாட்டரி சூதாட்டத்தை நியாயப்படுத்துவதில் கேரளத்தை ஆளும் போலி கம்யூனிஸ்டு ஆட்சிதான் முன்னணியில் நிற்கிறது. இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு, அரசியல் - கிரிமினல் பலத்தோடு லாட்டரி மாஃபியாக்கள் நாட்டு மக்களிடம் கோடி கோடியாய்க் கொள்ளையடித்து வருகின்றனர்.

## பாரம்பரிய மீனவர்களின் இறால் பண்ணை அழிப்புப் போராட்டம்



இறால் பண்ணை அழிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட சொரணா கிராம மீனவர்கள்

ஒரிசா மாநிலத்தில் கடந்த மே மாத இறுதியில் நடந்த இறால் பண்ணை அழிப்புப் போராட்டம் அம்மாநிலத்தையே உலுக்கியுள்ளது. இறால் மாஃபியாக்களுக்கும் அவர்களுக்கு அரணாக நின்ற அரசு எந்திரத்துக்கும் எதிராக மீனவர்கள் நடத்திய போராட்டத்தை ஒடுக்க போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியாகியுள்ளனர்; பலர் படுகாயமடைந்துள்ளனர்.

ஒரிசாவில் வங்கக் கடலோரத்தில் அமைந்துள்ள சில்கா ஏரி, இந்தியாவின் மிகப்பெரிய உப்பு நீர் ஏரியாகும். பூரி, குர்தா, கன்ஜம் ஆகிய மாவட்டங்கள் இந்த ஏரியை ஒட்டியுள்ளன. ஏரியை அடுத்துள்ள 150-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 2 லட்சம் மீனவர்கள் இந்த ஏரியை நம்பியே வாழ்கின்றனர். பாரம்பரிய மீன்பிடித் தொழிலுக்கும், அரிய கடல்வாழ் உயிரினங்களுக்கும், பறவைகள் சரணாலயத்துக்கும் சில்கா ஏரி புகழ் பெற்றதாகும்.

இந்த ஏரியில் 18500 ஏக்கர் அளவுக்கு மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கும், தனிப்பட்ட ஏழை மீனவர்களுக்கும் அரசு குத்தகைக்கு விட்டுள்ளது. '90-களின் தொடக்கத்தில் ஏழை மீனவர்கள் பாரம்பரிய முறையில் குறிப்பிட்ட பருவங்களில் இறால் மீன் வளர்த்துப் பயன்பெறும் வகையில் ஒரு திட்டத்தை அரசு அறிவித்தது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு, இறால் மாஃபியாக்களும், ஓட்டுக்கட்சித் தலைவர்களும், அரசு உயரதிகாரிகளும் சில்கா ஏரியை மொய்க்கத் தொடங்கினர். ஏழை மீனவர்களை உருட்டி மிரட்டி அவர்களைப் பினாமியாகக் கொண்டு, நவீன முறையில் இறால் பண்ணைகளை நிறுவியும், கூட்டுறவு சங்கங்களை தமது பணபலம் - அதிகார பலத்தால் பணிய வைத்து உள் குத்தகை மூலம் இறால் பண்ணைகளை விரிவுபடுத்தியும் ஏரியின் பல பகுதிகளைச் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டும் இறால் ஏற்றுமதி மூலம் கோடி கோடியாய் இலாபமடைந்தனர்.

அதேசமயம் நவீன முறையில் தீவிர இறால் வளர்ப்பு காரணமாக, இதற்காகப் பயன்படுத்தப்படும் இரசாயன மருந்துகள், உயிர்மப் பொருட்கள், மீன் குஞ்சுகளுக்கான செயற்கை உணவு முதலானவற்றால் சில்கா ஏரி படிப்படியாக நஞ்சாகிப் போனது. ஏரியின் மீன்வளம் வற்றிப் போய், பாரம்பரிய மீனவர்கள் பிழைக்க வழியின்றிப் பரிதவித்தனர். இதோடு தீவிர இறால் வளர்ப்பினால் சில்கா ஏரியின் அரிய உயிரினங்களான டால்பின் மீன், கடல் ஆமை முதலானவை செத்து மிதக்கத் தொடங்கின. சைபீரியாவிலிருந்து பருவ காலங்களில் வந்து செல்லும் பறவையினங்களும் அருகிவிட்டன. இறால் பண்ணைகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விளக்கி அவற்றைத் தடை செய்யக் கோரி, பாரம்பரிய மீனவர்கள் சங்கம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து போராடியது. இறால் பண்ணைகளைக் கட்டுப்படுத்துமாறு நீதிமன்றம் உத்திரவிட்ட போதிலும், இறால் மாஃபியாக்களைத் தமது கூட்டாளிகளாகக் கொண்டுள்ள ஒரிசா மாநில அரசு அதைச் செயல்படுத்தாமல் கிடப்பில் போட்டது.


தமது வாழ்வைப் பறிக்கும் இறால் பண்ணைகளை ஒழித்து, பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்ட மீனவர்கள் போராடிய போதெல்லாம் பணபலமும் அதிகாரபலமும் குண்டர்படையும் கொண்டுள்ள இறால் மாஃபியாக்கள் மிருகத் தனமாக மீனவர்களைத் தாக்கி படகுகளை உடைத்தெறிந்தனர். கடந்த எட்டாண்டுகளில் 50-க்கும் மேற்பட்ட மீனவர்கள் இறால் முதலாளிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த மே 29-ஆம் தேதியன்று குர்தா மாவட்டத்திலுள்ள சொரணா மற்றும் இதர கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் தமது படகுகளில் பெரும்படையாய்த் திரண்டு, இறால் பண்ணைகளைத் தாக்கி அழித்தனர். இதனால் ஆத்திரமடைந்த இறால் மாஃபியாக்கள் தமது குண்டர் படையுடன் மீனவர்களைத் தாக்க, இம்மோதலைக் கட்டுப்படுத்துவதாக வந்த போலீசு, கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 4 மீனவர்களைக் கொன்றொழித்துள்ளது. இது மீனவர் போராட்டத்தை மேலும் தீவிரமாக்கியதும், மாநில அரசு இப்போது சட்டவிரோத இறால் பண்ணைகளை அழிப்பதாக உறுதி அளித்துள்ளது. ஆனாலும், சில்கா ஏரியில் இறால் பண்ணைகள் அமைக்க முற்றாகத் தடைவிதித்து, பாரம்பரிய மீனவர்களின் வாழ்வுரிமையை நிலைநாட்டும் வகையில் எந்தவொரு சட்டபூர்வ முடிவையும் அறிவிக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



கரூர் மாவட்ட
பு.மா.இ.மு. செயலாளர்
தவமணி விடுதலை:

# அதிகார வர்க்கத்தின் பழிவாங்கும் வெறி அம்பலமானது!

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த கரூர் மாவட்ட புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணிச் செயலாளர் தோழர் தவமணியை, விடுதலை செய்ய உத்தரவிட்டு, சென்னை உயர்நீதி மன்றம் 7.7.99 அன்று தீர்ப்பளித்தது. ''தவமணி தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்றும், இந்தக் கைது நடவடிக்கை, அவரைத் தண்டிக்க வேண்டும் என்பதற்காகவே எடுக்கப்பட்டுள்ளது'' என்றும் உயர்நீதி மன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

14.7.99 அன்று திருச்சி மைய சிறைச் சாலையில் இருந்து விடுதலையான தோழர் தவமணியை, திருச்சி பகுதி ம.க. இ.க.வினர் புத்தூர் நாலு ரோட்டில் இருந்து உறையூர் - காந்திபுரம் வரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். இந்த ஊர்வலத்தின் பொழுது, சட்ட விரோதமாகவும், சனநாயக விரோதமாகவும் தோழர் தவமணி கைது செய்யப்பட்டிருந்ததை ம.க.இ.க. தோழர்கள் அம்பலப்படுத்திப் பேசினர். இதேபோன்று, கரூரிலும் தோழர் தவமணி பு.மா.இ.மு. தோழர்களால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ''இது அனுமதி பெறாத ஊர்வலம்; மீறிச் சென்றால் கைது செய்வோம்'' என போலீசு மிரட்டியதையும் மீறி, தோழர்கள் பறையடித்து முழக்கமிட்டுக் கொண்டே ஊர்வலமாகச் சென்றனர்.

''கரூர் நகரில் பு.மா.இ.மு.வின் வளர்ச்சியை எந்த வழியிலாவது தடுத்து நிறுத்திட வேண்டும்'' என்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்து மதவெறியர்கள், கரூர் மாவட்ட ஆட்சியாளர் சோ. அய்யர், போலீசு அதிகாரிகள், விசைத்தறி முதலாளிகள், ஓட்டுக்கட்சிகளின் கூட்டணிக்கு, தவமணியின் விடுதலையும், இத்தீர்ப்பும் நிச்சயமானதொரு பின்னடைவுதான்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பொழுது, கரூர் நகரமெங்கும் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி பு.மா.இ.மு. சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்திருந்தது. ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சவால்விடும் வகையில் செய்யப்பட்டிருந்த இத்தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம், ஓட்டுக் கட்சிகளுக்கு எரிச்சலையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. பா.ஜ.க.வின் மாவட்டத் தலைவர் மதுக்குமார், பு.மா. இ.மு. மீது நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியாளர் சோ. அய்யரைத் தூண்டி விட்டார். இதனையடுத்து, தோழர் தவமணி பொதுச் சுவற்றை அலங்கோலப் படுத்திய 'குற்ற'த்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

கரூர் நகரில் இயங்கிவரும் விவேகானந்தா கல்வி நிறுவனத்திற்கு கோடிக் கணக்கான மதிப்புள்ள சொத்துகள் உள்ளன. இந்தச் சொத்துகளை அனுபவிப்பதற்கு, இந்து மதப் பண்டாரங்களுக்கு இடையே நடந்த போட்டா போட்டி, ஆயுத மோதலாகவும் வளர்ந்து, அந்நிறுவனம் நடத்தி வந்த பள்ளிக் கூடங்களும் இழுத்து மூடப்பட்டன. ஓட்டுக் கட்சிகளோ 4,000 மாணவர்கள் - ஆசிரியர்களின் எதிர்காலம் குறித்து அக்கறை கொள்ளாமல், எதிரும் புதிருமாக மோதிக் கொண்ட இந்து மதச் சாமியார்களுக்கு ஆதரவாக நின்றனர்.

தேவர் சாதியைச் சேர்ந்த ஆத்மா னந்தா என்ற சாமியாருக்கு தேவர் சாதி வெறியனான கரூர் மாவட்ட ஆட்சியாளர் சோ. அய்யரும், தி.மு.க. மாவட்டச் செயலாளர் பரமத்தி சண்முகமும் ஆதரவு தந்தனர். கவுண்டர் சாதி ஆதிக்கம் நிறைந்த திருப்பராய்துறை தபோவனத்தைச் சேர்ந்த போதானந்தாவிற்கு ஆதரவாக பா.ஜ.க. கும்பல் குதித்தது.

இப்பிரச்சினையில் தலையிட்ட பு.மா.இ.மு. இந்து மதச் சாமியார்களின், ஓட்டுக்கட்சிகளின் பேராசையை அம்பலப் படுத்தித் துண்டுப் பிரசுரம் வெளியிட்டது. ''இக்கல்வி நிறுவனத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும்'' என்ற முழக்கத்தை முன் வைத்து, 300-க்கும் மேற்பட்ட பொது மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டத்தின் பொழுது, எதிர்பாராதவிதமாக பேருந்து ஒன்றின் கண்ணாடி கல்லடிபட்டு உடைந்து போனது. கோடிக்கணக்கான சொத்துக்களைக் கொள்ளையடிக்க மோதிக் கொண்ட சாமியார்களைக் கைது செய்யாத போலீசு, அற்பமான கண்ணாடி உடைந்ததைக் காரணமாக வைத்து தோழர் தவமணியையும், பகுதி இளைஞர்கள் 30 பேரையும் கைது செய்து, திருச்சி மையச் சிறைச்சாலையில் அடைத்தது.

கரூர் - காமராசபுரத்தைச் சேர்ந்த சுப்பிரமணி என்ற விசைத்தறி தொழிலாளி நியாயமான கூலி கேட்டதற்காக தறி முதலாளிகளால் தாக்கப்பட்டார். போலி கம்யூனிஸ்டு கட்சியின் கீழ் செயல்படும் ''ஏ.ஐ.டி.யு.சி.'' தொழிற்சங்கம், கூலிப் பிரச்சினையையும், தொழிலாளி தாக்கப்பட்டதையும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என மழுப்பி, தொழிலாளர்களுக்குத் துரோகமிழைத்தது.

இப்பிரச்சினையைக் கையில் எடுத்த பு.மா.இ.மு., 1996-ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தப்படி கூலி தர மறுத்து, தறி முதலாளிகள் செய்து வரும் அடாவடித்தனங்களை அம்பலப்படுத்தி விரிவாகப் பிரச்சாரம் செய்தனர். இப்பிரச்சாரத்தினால் ஈர்க்கப்பட்ட விசைத்தறி தொழிலாளர்கள் பு.மா.இ.மு.வின் பின் அணி திரண்டனர். இதனால் நெருக்கடிக்குள்ளான மாவட்ட நிர்வாகம் முத்தரப்பு பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்தது.

தொழிலாளர்களுக்குத் துரோகமிழைத்த ''ஏ.ஐ.டி.யு.சி.''-ஐ பேச்சு வார்த்தைக்கு அழைத்த மாவட்ட நிர்வாகம், பு.மா.இ.மு. கலந்து கொள்வதற்கு தடை விதித்தது. பேச்சு வார்த்தை நடத்த வந்த அதிகாரி, ''பு.மா.இ.மு. நக்சலைட்டு அமைப்பு'' என்று பூச்சாண்டி காட்டிய பின்னும், விசைத்தறி தொழிலாளர்கள் பேச்சு வார்த்தைக்கு பு.மா.இ.மு.வை அழைக்க வேண்டும் என்பதில் உறுதியாக நின்றனர். ஆனாலும், மாவட்ட நிர்வாகம் பு.மா. இ.மு.வை அழைக்காமலேயே பேச்சு வார்த்தை நாடகத்தை நடத்தி முடிந்தது.

இப்படி கரூர் நகரில் பு.மா.இ.மு.வின் அரசியல் செல்வாக்கு வளர்வதை இந்து மதவெறிக் கும்பலும், தறி முதலாளிகளும், இவர்களின் அடிவருடியான மாவட்ட ஆட்சியாளர் சோ அய்யரும், போலீசும் தங்களின் பொது நலனுக்கு எதிரானதாகப் பார்த்தனர். தோழர் தவமணி தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதற்கு முதல் நாள், சீமைச் சாராயக் கடையில் போலீசு அதிகாரியோடு பேசிக் கொண்டிருந்த தறி முதலாளி ஒருவன், அந்த வழியே வந்த விசைத்தறி தொழிலாளியிடம், ''நாளையோட உங்க கொட்டமெல்லாம் அடங்கிடும்டா'' எனச் சவால் விட்டுள்ளான். தவமணி தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதற்காக தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தது, பா.ஜ.க. இதில் இருந்தே இவர்களின் பழிவாங்கும் வெறியைத் தெரிந்து கொள்ளலாம். இதைதான் சென்னை உயர்நீதி மன்றமும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

தோழர் தவமணியை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு, ஏற்கனவே, தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சா


படிப்பகம்

www.padippakam.com

ரத்தின் பொழுதும், இந்துமதப் பண்டாரங்களை எதிர்த்து நடத்திய போராட்டத்தின் பொழுதும் தவமணி கைது செய்யப்பட்டதையே ஆதார வழக்குகளாக மாவட்ட ஆட்சியாளர் சோ. அய்யர் காட்டியுள்ளார்.

''பொதுச் சுவற்றை அலங்கோலப்படுத்திய குற்றமும்,'' விவேகானந்தா கல்வி நிறுவனத்தையும், அதன் சொத்துக்களையும் தமிழக அரசே ஏற்க வேண்டும்'' என்பதும் எப்படி தேசத்தின் பாதுகாப்புக்கு ஆபத்தானதாகும்? மேலும், ஆதார வழக்குகள் அனைத்திலும் தோழர் தவமணி பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதோடு, ''இவ்வழக்குகள் பொய்யாக ஜோடிக்கப்பட்டவை'' என்று பிணை வழங்கிய மாவட்ட நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. சென்னை உயர்நீதி மன்றமும் தனது தீர்ப்பில் இந்த ஆதார வழக்குகள் குறித்த தனது சந்தேகத்தைப் பதிவு செய்துள்ளது. மேலும், கரூர் நகர போலீசு குறிப்பிட்ட பிரிவுகளின் கீழ் தோழர் தவமணி மீது தொடர்ந்து வழக்குத் தொடுத்து வந்திருப்பதையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தோழர் தவமணி மீது கரூர் நகர போலீசு ஜோடித்த வழக்குகள் அனைத்தும் 10/98-இல் நடந்தவை; தோழர் தவமணியோ 2/99-இல்தான் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். ''மாவட்ட நிர்வாகம் தடுப்புக் காவல் கைதியை பொது அமைதிக்குப் பாதகம் ஏற்படுத்தக் கூடியவர் எனக் குறிப்பிட்டுள்ளது. ஆனால், இந்தக் கால இடைவெளியில் (10/98 - 2/99) தடுப்புக் காவல் கைதியால் பொது அமைதிக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எனவே, தடுப்புக் காவல் கைதி பொது அமைதிக்குப் பாதகமானவர் என்ற அடிப்படையில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதற்கு எவ்வித உயிர் ஆதாரமான தொடர்பும் இல்லை'' என சென்னை உயர்நீதி மன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. தோழர் தவமணி கைது செய்யப்பட்டது அப்பட்டமான அதிகார முறைகேடு என்பதுதான் இதன் பொருள்.

''இந்து மதப் பண்டாரங்கள் ஓட்டுக் கட்சிகளின் துணையோடு, விவேகானந்தா கல்வி நிறுவனத்தின் சொத்துக்களைச் சூறையாடுவதைக் கண்டு கொள்ளாமல் இருப்பதும், விசைத்தறி முதலாளிகள், குறைந்தபட்ச கூலி கூடத் தராமல் தொழிலாளிகளைச் சுரண்டி வருவதை அனுமதிப்பதும்தான் தேசத்திற்கு பாதுகாப்பானது; இதை எதிர்ப்பவன் சமூக விரோதி; தேசப் பாதுகாப்பிற்கு எதிரானவன்'' - இதுதான் மைய மற்றும் தமிழக அரசின் வாதம்; அதிகார வர்க்கத்தின் வாதம்; போலீசின் வாதம். இந்த சட்டமன்ற - நாடாளுமன்ற அதிகார அமைப்பின் மக்கள் விரோதத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கு இதை விட வேறு சான்று தேவையா?

தகவல்:
பு.மா.இ.மு., கரூர்.

## கரும்பு விவசாயிகளின் போராட்டம்:

# தேவை விரிந்த பார்வை

தேர்தல் நெருங்கிவிட்ட நேரத்தில் கரும்பு விவசாயிகள் சென்னையில் நடத்திய மிகப் பெரிய பேரணியும் பொதுக்கூட்டமும் ஓட்டுக்கட்சிகளை மிரள வைத்துள்ளது. தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றும் கூட்டணிக்கே தேர்தலில் வாக்களிப்போம் என்று விவசாயிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதைத் தொடர்ந்து, தமிழகத்தைச் சூறையாடிய ஜெயலலிதா தனது அரசியல் ஆதாயத்துக்காக, கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றாத தி.மு.க. அரசைக் கண்டித்து தமது கட்சியின் சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக அறிவித்தார். வலது கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலாளர் நல்லக் கண்ணு, ''கரும்பு விவசாயிகளின் ஆத்திரம் வருகிற தேர்தலில் எதிரொலிக்கும்'' என்கிறார்.

''டன்னுக்கு ஆயிரம் ரூபாய் என கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வதாக தேர்தல் வாக்குறுதி அளித்த தி.மு.க., ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளாகியும் அதை நிறைவேற்றாமல் தொடர்ந்து விவசாயிகளை வஞ்சித்து வருகிறது. இதுதவிர, பல தனியார் சர்க்கரை ஆலைகள் கடந்த ஐந்தாண்டுகளுக்கும் மேலாக விவசாயிகளிடமிருந்து வாங்கிய கரும்புக்கு இன்னமும் முழுமையாக தொகையைக் கொடுக்கவில்லை. இதற்காக விவசாயிகள் பல முறை போராட்டங்களை நடத்திய பின்னரும், அற்பத் தொகையே பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளை ஏமாற்றி கோடிக்கணக்கில் சுருட்டி வரும் சர்க்கரை ஆலை அதிபர்கள் மீது அரசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. அதேசமயம் கடனை அடைக்க முடியாமல் பரிதவிக்கும் கரும்பு விவசாயிகளிடம் ஜப்தி நடவடிக்கை என்று அரசு கெடுபிடி செய்து வருகிறது'' என்று கரும்பு விவசாயிகள் குமுறுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் கரும்புக்கான விலையை மைய அரசுதான் நிர்ணயிக்கும். இதோடு மாநில அரசு தன் பங்குக்கு ஆதரவு விலை என்று ஒரு தொகையைக் கூட்டி விலை நிர்ணயம் செய்யும். இவ்வாண்டு மைய அரசு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 527 என விலை நிர்ணயம் செய்துள்ளது. தமிழக அரசு தன் பங்குக்கு ஆதரவு விலையாக ரூ. 175.00-ஐக் கூட்டி, ரூ. 702.50 என விலை நிர்ணயம் செய்துள்ளது. இது கடந்த ஆண்டு அறிவித்த அதே ஆதரவு விலை ஆகும். நடப்பு ஆண்டில் ஆதரவு விலையாக தமிழக அரசு ஒரு பைசாகூட கூட்டித் தரவில்லை. இதனாலேயே கரும்பு விவசாயிகள் ஆத்திரமடைந்து போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

கரும்புக்கான விலையை நிர்ணயம் செய்வதில் மாநில அரசு தலையிடவோ, பரிந்துரை செய்யவோ கூடாது என்று கடந்த ஆண்டில் உத்திரப்பிரதேச சர்க்கரை ஆலை அதிபர்கள் வழக்கு தொடுத்து அதில் வெற்றியும் பெற்றனர். அதை முன்மாதிரியாகக் காட்டி, தென்னிந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் சங்கம் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து, தற்காலிகத் தடை உத்திரவும் பெற்றுள்ளனர். நீதிமன்ற உத்திரவுக்கு எதிராகச் செயல்பட முடியாததாலேயே, ஆதரவு விலையை உயர்த்த இயலவில்லை என்று தி.மு.க. அரசு நியாயவாதம் பேசுகிறது. இத்தடை உத்திரவை நீக்க தி.மு.க. அரசு உருப்படியாக எந்த முயற்சியும் எடுக்காமல், சர்க்கரை ஆலை அதிபர்களுக்கு ஆதரவாகச் செயல்படுவதாக விவசாய சங்கங்களும் எதிர்க்கட்சிகளும் குற்றம் சாட்டுகின்றன.

இதுதவிர கரும்பின் கட்டுமானம் (சர்க்கரைச் சத்து) குறைவாக உள்ளதாகக் கூறி, 11 கட்டுமானம் உள்ள கரும்புக்கு 8 கட்டுமான அளவுக்கே தொகை கொடுத்து மோசடி செய்வது; தொகையையும் உடனடியாகப் பட்டுவாடா செய்யாமல் இழுத்தடிப்பது; 10 மாதத்தில் வெட்ட வேண்டிய கரும்பை 12;15 மாதங்களானாலும் வெட்டுவதற்கு உத்திரவு தராமல் இழுத்தடிப்பது; இதனால் கரும்பின் கட்டுமானம் குறைந்து விவசாயிகள் பாதிக்கப்படுவது; கரும்பை எடை போடுவதில் மோசடி - தில்லுமுல்லுகள் என ஆலைகள் பல வழிகளிலும் விவசாயிகளை ஏய்க்கின்றன. பல தனியார் சர்க்கரை ஆலைகள் தமது இலாபத்தையும் முதலீட்டையும் வேறு துறைகளிலோ அல்லது புதிய ஆலைகளிலோ பதுக்கி விட்டு நட்டக் கணக்கு காட்டி வருகின்றன. கரும்பை ஏற்றிவரும் லாரிகளுக்கு இலஞ்சம், எடை போடுவதில் மோசடி, அதிகாரிகளின் அலட்சியம் முதலானவற்றாலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 1000/- விலை நிர்ணயம் செய்யக் கோரி கரும்பு விவசாயிகள் சென்னையில் நடத்திய ஊர்வலம்

இந்தியாவின் மொத்த சர்க்கரைத் தேவை ஆண்டுக்கு 135 இலட்சம் டன். ஆனால் நடப்பாண்டில் உற்பத்தியாக வுள்ள சர்க்கரையின் அளவு ஏறத்தாழ 150 லட்சம் டன். இதுதவிர, முந்தைய ஆண்டு கையிருப்பாக சுமார் 70 லட்சம் டன் சர்க்கரை உள்ளது. நடப்பாண்டு உற்பத்தியையும் கையிருப்பையும் சேர்த்தால் மொத்தத் தேவையைவிடக் கூடுதலாக சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. இருப்பினும் சுதேசி சவடால் அடிக்கும் பா.ஜ.க. வெளிநாடுகளிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்கிறது.

இதன் விளைவாக உள்நாட்டு சர்க்கரை உற்பத்தியும், சர்க்கரை ஆலைகளும் தொழிலாளர்களும் க்ரும்பு விவசாயிகளும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றனர். கரும்பு மட்டுமல்ல; தக்காளி, வெங்காயம், பருத்தி, வாழை என அனைத்துப் பணப்பயிர் விவசாயமும் விவசாயிகளும் நெருக்கடியிலும் கடன் சுமையிலும் சிக்கித் தவிக்கின்றனர். எது அப்போதைக்கு அதிக விலை போகிறதோ அதைப் பயிரிடும் நிலைக்கு விசாயிகள் தள்ளப்படுவதும், பின்னர் விளைச்சல் பெருகி வரத்து அதிகமாகி விட்டதால் விலை குறைந்து விட்டது என்று விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்காமல் நட்டமடைவதும் வாடிக்கையாகி விட்டது. இவ்வாண்டு தொடக்கத்தில் தக்காளியின் விலை அதள பாதளத்துக்குச் சரிந்து, பறிக்கிற கூலிக்குக் கூட கட்டுப்படியாகாமல், தக்காளி விவசாயிகள் தக்காளியைச் செடியிலிருந்து பறிக்காமலே விட்ட கொடுமையும், தக்காளியை கடைத் தெருவிலேயே கொட்டிவிட்டுச் சென்ற அவலமும் நடந்தது.

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கையை ஆட்சியாளர்கள் செயல்படுத்தத் தொடங்கியதிலிருந்து இந்த நெருக்கடியும் அவலமும் தீவிரமாகி விட்டது. இந்திய விவசாயம் உலகச் சந்தையோடு பிணைக்கப்பட்டு விட்டதால், உலகச் சந்தையில் எந்தப் பொருளுக்கு கிராக்கி உள்ளதோ, அதை விளைவித்து ஏற்றுமதி செய்வது; நமக்குத் தேவையானவற்றை இறக்குமதி செய்து கொள்வது என்பதே இன்று ஆட்சியாளர்கள் விவசாயக் கொள்கையாகி விட்டது. கடந்த ஆண்டில் வெங்காயம் தாராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டதே விலை தாறுமாறாக ஏறியதற்கு காரணமாகும்.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்குத் தேவையான பழங்கள், காய்கறிகள், பலவகையான பூக்கள், இறால் மீன் முதலானவற்றை உற்பத்தி செய்ய வேண்டும்; நமக்குத் தேவையான அரிசி, கோதுமை முதலான அத்தியாவசிய உணவுப் பொருட்களை அந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ள வேண்டும் என்பது உலகமயத்தின் கட்டாய விதியாகும். இதன்படி, தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் நமது நாட்டில் நிலங்களை வாங்கி பெரும் பண்ணைகளை அமைக்கவும், ''ரெடிமேடு'' டப்பா உணவுகளை விற்கவும் தாராள அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இதற்காகவே நில உச்சவரம்புச் சட்டத்தை படிப்படியாக நீக்க ஆட்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர். இந்தியாவின் பாரம்பரிய விவசாயம் அழிக்கப்பட்டு, ''கோட்டு-சூட்டு'' போட்ட வெள்ளைக்காரர்களின் பண்ணைகளில் இந்திய விவசாயிகள் கொத்தடிமைகளாக உழைக்க வேண்டிய அவலமும் அபாயமும் நாட்டைச் சூழ்ந்துள்ளது.

தலைப்பாகைக்கு மட்டுமல்ல, தலைக்கே ஆபத்து வந்துள்ள சூழ்நிலையில் கரும்பு விவசாயிகள் எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகளை நம்புவதும், கூடுதல் விலை கோருவதோடு போராட்டத்தை வரம்பிட்டுக் கொள்வதும் விவேகமானதல்ல. கரும்புக்கு கூடுதல் விலை கோரும் போராட்டத்தை தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்துக்கு எதிரான போராட்டமாக விரிவுபடுத்தி முன்னெடுத்துச் செல்ல வேண்டும். விவசாயிகளைப் பன்னாட்டு நிறுவனங்கள் கொத்தடிமைகளாக்கி, நாட்டை மறுகாலனியாக்கி வரும் தனியார்மய - தாராளமயக் கொள்கைகளை விசுவாசமாகச் செயல்படுத்திவரும் அனைத்து ஓட்டுக்கட்சி துரோகிகளையும் புறக்கணித்து, புரட்சிகரத் தலைமையின் கீழ் விவசாயிகள் அணிதிரள்வதே அதற்கான முதற் தேவையாகும்.

• குமார்



படிப்பகம்

www.padippakam.com

★ பன்னாட்டு நிறுவனங்கள் அபகரித்துக் கொண்ட நிலங்கள் பறிமுதல்

★ தேர்தலைப் புறக்கணித்த கிராமப்புற விவசாயக் கமிட்டிகள்

# இந்தோனேஷிய விவசாயிகளின் எழுச்சி

*விவசாயிகள் விடுதலை முன்னணியின் தலைமையில் புரட்சிகர அமைப்புகள் இணைந்து நடத்திய இறால் பண்ணை அழிப்புப் போராட்டம், தேக்குப் பண்ணை அழிப்புப் போராட்டம், அமெரிக்க மான்சாண்டோ விதைக் கம்பெனி எதிர்ப்புப் போராட்டம் - இவையெல்லாம் பரபரப்பூட்டி பிரபலமடையும் நோக்கத்திற்காக நடத்தப்பட்ட போராட்டங்கள் என்று போலி கம்யூனிஸ்டுகளும் போலி புரட்சியாளர்களும் கொச்சைப்படுத்தினார்கள். இவற்றால் விவசாயிகளை புரட்சிக்கு அணிதிரட்டவோ, ஏகாதிபத்திய ஆதிக்கத்தை முறியடிக்கவோ முடியாது; இவை வர்க்கப் போராட்டத்தை விட்டுத் திசைவிலகும் போக்காகும் என்று முதுகுக்குப் பின்னே முணுமுணுத்தார்கள். இவற்றால் என்ன சாதித்துவிட முடியும் என்று கேலி செய்தார்கள்.*

*ஆனால் இந்தோனேஷியாவில் இன்று விவசாயிகள் நடத்தி வரும் இத்தகைய போராட்டங்கள், இதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. பன்னாட்டு நிறுவனங்கள் - தரகுப் பெரு முதலாளிகளின் பணப்பயிர் பண்ணைகளுக்கு எதிராகவும், உலக வங்கி - ஐ.எம்.எப் - பின் ஆதிக்கத்துக்கு எதிராகவும் விவசாயிகள் நடத்தி வரும் நிலப்பறி இயக்கம், இந்தோனேஷியாவில் காட்டுத் தீயாகப் பற்றிப் படர்ந்து வருகிறது.*

தென் கிழக்காசிய நாடான இந்தோனேஷியாவில் சர்வாதிகாரி சுகர்டோவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, விவசாயிகள் தம்மிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களைக் கைப்பற்ற தொடர்ந்து போராடி வருகிறார்கள். நாணயமதிப்புச் சரிவினால் அந்நாட்டின் பொருளாதார நெருககடி முற்றிய பிறகு, உணவும் நிலமும் இன்று அவர்களுக்கு மிக அத்தியாவசியமானதாகி விட்டது. பன்னாட்டு நிறுவனங்களும், தரகுப் பெருமுதலாளிகளும், அரசுத்துறை என்ற பெயரில் அதிகார வர்க்கமும் பறித்துக் கொண்ட தமது நிலங்களை மீட்கும் போராட்டத்தில் இறங்குவது அவர்களுக்குத் தவிர்க்க முடியாததாகிவிட்டது. நகரங்களில் வேலையிழந்து வீதியில் வீசியெறியப்பட்டுள்ள இலட்சக்கணக்கான தொழிலாளர்களும் கிராமப்புறங்களுக்கு வந்து விவசாயிகளுடன் இணைந்து இப்போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

உலக வங்கி - ஐ.எம்.எஃப்-பின் கட்டளைப்படி, விவசாயத்திற்கான மானியங்கள் படிப்படியாக வெட்டப்பட்டதன் விளைவாக, விவசாயம் புறக்கணிக்கப்பட்டு இந்தோனேஷிய விவசாயிகள் வறுமையில் பரிதவித்தனர். இந்நிலையில் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடைந்து விவசாயிகள் அரைப்பட்டினிக்கும் முழு ஏழ்மைக்கும் தள்ளப்பட்டனர். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதாகக் கூறிக் கொண்டு ஐ.எம்.எஃப். அறிவித்த 'பாதுகாப்பு வளைய'த் திட்டத்தால், பட்டினியால் பரிதவித்த மக்களுக்கு ஒரு வேளை கஞ்சிகூட கிடைக்க வில்லை. பட்டினிப் பட்டாளத்தின் போராட்டம் உணவுக் கலகமாக மாறியது. உணவுக் கிடங்குகள், மண்டிகள், கடைகள் அனைத்தும் சூறையாடப்பட்டன. உணவுப் பொருட்களை, தானியங்களை ஏற்றிவரும் வாகனங்கள் நடு வழியிலேயே விவசாயிகளால் பறிமுதல் செய்யப்பட்டன. உண்பதற்கோ, விற்பதற்கோ உள்ள அனைத்துமே சூறையாடப்பட்டன. உணவுக் கலகமாகத் தொடங்கிய இப்போராட்டம் நாளடைவில் தேக்குப் பண்ணை, எண்ணெய்ப் பனைமரப் (பாமாயில்) பண்ணை, விளையாட்டு மைதானம், புகையிலை எஸ்டேட்டுகள், பெட்ரோலிய நிறுவனங்கள், பணப்பயிர் - தோட்டப்பயிர் பண்ணைகள் முதலானவற்றைக் கைப்பற்றும் போராட்டமாக முன்னேறியது.

இப்போராட்டங்கள் அனைத்தையும் சர்வாதிகாரி சுகர்டோவின் வழியிலேயே, ஹபிபீ தலைமையிலான புதிய அரசும் இராணுவத்தைக் கொண்டு மிருகத்தனமாக ஒடுக்கி வருகிறது. போகோர் எனுமிடத்திலுள்ள சுகர்டோவின் பண்ணையையும், சிமாகன் எனுமிடத்திலுள்ள கோல்ஃப் விளையாட்டு மைதானத்தையும் விவசாயிகள் கைப்பற்றிக் கொண்டதும், இராணுவம் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி அவற்றை விவசாயிகளிடமிருந்து கட்டாயமாகப் பறித்துள்ளது. வடக்கு சுமத்ராவில் மேடன் நகர் அருகே தம்மிடமிருந்து பறிக்கப்பட்டு புகையிலைப் பண்ணையாகவும், எண்ணெய்ப் பனைமரப் பண்ணையாகவும் மாற்றப்பட்டுள்ள நிலங்களைக் கைப்பற்ற விவசாயிகள் நடத்திய போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் பலர் படுகாயமடைந்துள்ளனர். இராணுவப் போலீசாருக்கும் விவசாயிகளுக்குமிடையே நடக்கும் மோதல் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன.

★☆★

இந்தோனேஷியாவில் சுகர்டோ ஆட்சியில், விவசாயத்திற்கான மானியங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு விவசாயம் புறக்கணிக்கப்பட்டதால், விவசாயிகள் கடனாளியாகி வறுமையில் சிக்கித் தவித்தனர். அரசாங்கமோ உலக வங்கி ஐ.எம்.எஃப் மற்றும் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களிடம் கோடிக்கணக்கில் கடன் வாங்கி, அதற்கு வட்டி கூடச் செலுத்த முடியாமல், மீளமுடியாத நெருக்கடியில் சிக்கித் தவித்தது. இக்கடன் சுமையிலிருந்து மீள்வதற்காக இந்தோனேஷிய அரசு மீண்டும் உலக வங்கியிடமும் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களிடமும் கையேந்தி நின்றது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு, இந்தோனேஷியாவில் ஏற்றுமதி அடிப்படையிலான விவசாயப் பண்ணைகளை நிறுவினால் கடன் தருவதாக உலக வங்கியும் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களும் அறிவித்தன. அவற்றின் கட்டளைப்படி, வறுமையிலும் கடன்சுமையிலும் சிக்கித் தவித்த விவசாயிகளிடமிருந்து அற்ப விலைக்கோ அல்லது உருட்டி மிரட்டியோ நிலங்கள் பறிக்கப்பட்டு, ஏகாதிபத்திய நிறுவனங்களின் முதலீட்டில் பெரும் விவசாயப் பண்ணைகளாக மாற்றப்பட்டன. குறிப்பாக சர்வதேசச் சந்தையில் பாமாயிலுக்கு நல்ல விலை உள்ளதால், பல லட்சம் ஹெக்டேர் நிலங்கள் விவசாயிகளிடமிருந்து பறிக்கப்பட்டு எண்ணெய்ப் பனைமரப் பண்ணைகளாக மாற்றப்பட்டன. ''பாமாயில் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணி கோடிகோடியாய் கிடைக்கும். கடன்கள் அனைத்தும் ஓரிரு ஆண்டுகளில் செலுத்தப்பட்டு, நாடு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிவிடும்'' என்று சுகர்டோ அரசு பசப்பியது. இத்தகைய பெரும் பண்ணைத் திட்டங்கள் சுகர்டோ அரசின் மகத்தான சாதனை என்று ஏகாதிபத்தியங்கள் உச்சி முகர்ந்தன.

ஆனால், பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கான இப்பண்ணைகளால் நாட்டின் விவசாயமும் விவசாயிகளும் போண்டியாகி நெருக்கடி மேலும் தீவிரமடைந்தது. எந்த நிலத்தில் பரம்பரையாக உழுதுபயிரிட்டு அவற்றின் சொந்தக்காரர்களாக இருந்தார்களோ, அந்த நிலத்தை இழந்து, பன்னாட்டு நிறுவனத்தின் பண்ணையாக மாற்றப்பட்டுள்ள தமது



படிப்பகம்

www.padippakam.com

நிலத்தில் விவசாயிகள் அற்பக் கூலிக்கு கொத்தடிமைகளாக வேலை செய்தார்கள். விவசாய நிலங்கள் மட்டுமின்றி 25 லட்சம் ஹெக்டேர் காட்டுப் பகுதியும் தீவிர எண்ணெய்ப் பனைமரப் பண்ணைகளாக மாற்றப்பட்டன. 1997 - 98-ஆம் ஆண்டுகளில் இந்தோனேஷியக் காடுகள் பல மாதங்களாகப் பற்றி எரிந்ததற்கு, பன்னாட்டு நிறுவனங்களின் பகற்கொள்ளைக்காக காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பே முக்கிய காரணமாகும்.

கடந்த ஆண்டில் இந்தோனேஷியாவில் நாணய மதிப்புச் சரிவினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, சர்வாதிகார சுகர்டோ ஆட்சிக்கெதிராக நடந்த மாணவர்களின் தீரமிக்கப் போராட்டம் ஆகிவற்றைத், தொடர்ந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஹபிபீ தலைமையிலான இடைக்கால அரசு நிறுவப்பட்டது. அதேசமயம் உலக வங்கி - ஐ.எம்.எஃப். பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் இரும்புப் பிடியும் இறுகியது.

இந்தோனேஷியாவின் திவாலான பொருளாதாரத்தை மீட்க 4000 கோடி டாலர் அவசரகால கடனாகக் கொடுத்த ஐ.எம்.எப். அதற்கீடாக இந்தோனேஷியாவைச் சூறையாட அடிமைச் சாசனத்தில் கையெழுத்திட வைத்தது. எண்ணெய்ப் பனைமரச் சாகுபடியைத் தீவிரமாக்க உத்திர விட்டது. சிறு விவசாயிகளிடமிருந்து நிலங்களைப் பறித்து பன்னாட்டு நிறுவனங்களின் பெரும் பண்ணைகளாக்குவது, காடுகளை அழித்து எண்ணெய்ப் பனை, இரப்பர், தேயிலை, புகையிலைப் பண்ணைகளாக்குவது, உற்பத்திப் பொருட்களை முழுமையாக எடுத்துச் செல்ல தாராள அனுமதி - என ஐ.எம்.எஃப் விதித்த கட்டுப்பாடுகளை இந்தோனேஷிய அரசு விசுவாசமாகச் செயல்படுத்தியது.

இதன்படி கடந்த ஆண்டு இறுதியில் இந்தோனேஷியாவின் கிழக்கு மாநிலங்களில் 30 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் விவசாயிகளிடமிருந்து பறிக்கப்பட்டு எண்ணெய்ப் பனைமரப் பண்ணைகளாக்கப் பட்டன. அடுத்த ஈராண்டுகளில் மேலும் 20 லட்சம் ஹெக்டேரில் எண்ணெய்ப் பனைமரச் சாகுபடியை ஜாவா தீவில் செயல்படுத்த 100 கோடி டாலர் தொகையை அரசு அவசரமாக ஒதுக்கீடு செய்தது. கிழக்கு கலிமந்தன் பகுதியில் இத்திட்டத்துக்கு 3 லட்சம் டாலர் ஒதுக்கப்பட்டது. அண்டை நாடான புருனேயின் சுல்தான், 3 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் எண்ணெய்ப் பனைமரச் சாகுபடி செய்ய தாராள அனுமதி தரப்பட்டது. கலிமந்தன், சுமத்ரா, சுலாவேசி மாநிலங்களில் பெரும் பகுதியான விவசாய நிலங்களும் காடுகளும் ஃப்ரீபோர்ட், ரியோ டின்டோ, மொபில் ஆயில் முதலான பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கப்பட்டன. விவசாயிகள் மட்டுமின்றி, காடுகளைச் சார்ந்து வாழும் தயாக் எனும் பழங்குடியினரும் தங்களது வாழ்வுரிமையை இழந்து பரிதவித்தனர்.

இந்நிலையில்தான் உணவுக் கலகமாகத் தொடங்கிய விவசாயிகளின் போராட்டம், நிலப்பறி இயக்கமாக மாறத் தொடங்கியது. ஆங்காங்கே சங்கங்களாகத் திரண்ட விவசாயிகள் வடக்கு சுமத்ராவிலுள்ள அசகான் நகரில் இந்தோனேஷிய ஐக்கிய விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு எனும் மத்திய சங்கமாக இவ்வாண்டு தொடக்கத்தில் அணி திரண்டனர். இதே வழியில் இந்தோனேஷியாவின் அனைத்து மாநிலங்களிலும் விவசாயிகள் சங்கமாக அணிதிரண்டு ஒருங்கிணைந்தனர்.

பண்ணை நிலங்களைப் பறித்தெடுப்பது, அத்தியாவசியப் பொருட்களுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்வது, பறிக்கப்பட்ட நிலங்களில் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்து உள்நாட்டு பொருளாதாரத்தைக் கட்டியமைத்து வளர்ப்பது, பன்னாட்டு நிறுவனங்களின் நில ஆக்கிரமிப்புக்கும் கொள்ளைக்கும் வழிவகுக்கும் தற்போதைய அரசியல் சட்டங்களை முற்றாக அழிப்பது, பன்னாட்டு நிறுவனங்களுக்குப் பாதுகாவலனாகச் செயல்படும் இராணுவத்தை விரட்டுவது முதலான அம்சங்களைக் கொண்ட கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்ட விவசாய சங்கங்கள், அவற்றைச் செயல்படுத்தும் போராட்டத்தில் தீவிரமாக இறங்கின. ஏற்கனவே அரசியல் மாற்றத்திற்காகப் போராடி வரும் மாணவர்களையும் தொழிலாளர்களையும் தமக்குத் தோள் கொடுக்குமாறு அறைகூவி அழைத்தன. ''தீவான் தானி'' எனப்படும் விவசாயி சங்கங்களின் தலைமைக் கமிட்டி இவற்றுக்கு வழிகாட்டி இயக்கியது.






கோல்ஃப் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக நிலங்களைப் பறிகொடுத்த விவசாயிகள் (மேலே); அவர்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மாணவர்கள் (கீழே)

கடந்த ஆண்டு இறுதியிலிருந்து சுமத்ரா மாநிலத்தில் பெங்குலு, எசி, லாம்புங் முதலான இடங்களில் நிலப்பறி போராட்டம் தொடர்கிறது. இவ்வாண்டு தொடக்கத்தில் சுலாவேசி மாநிலத்தில் பன்னாட்டு நிறுனங்களின் பண்ணைகளைப் பறிக்க மூன்று இடங்களில் விவசாயிகள் போராடியதோடு, மாநில சட்டமன்றத்தின் முன்பாக மறியல் போராட்டமும் நடத்தினர். தமது நிலங்களை உரிய



படிப்பகம்

www.padippakam.com

நிவாரணத் தொகையுடன் திரும்ப ஒப்படைக்கக்கோரி, (நாட்டின் பல பகுதிகளில்) பண்ணைகளின் இயந்திர சாதனங்களைக் கைப்பற்றி விவசாயிகள் முடக்கி வைத்துள்ளனர். குறிப்பாக, இந்தோனேஷியக் காடுகள் பற்றிஎரியக் காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ''பி.டி. லண்டன்'' எனும் பன்னாட்டு பண்ணை நிறுவனத்தின் இயந்திர சாதனங்களை தயாக் பழங்குடி மக்கள் கைப்பற்றிக் கொண்டு, அந்நிறுவனத்திடம் கோடிக்கணக்கில் நிவாரணம் கேட்டு பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். விவசாயிகளின் உறுதிமிக்கப் போராட்டங்களைக் கண்டு ஐ.எம்.எஃப் - பும், பன்னாட்டு நிறுவனங்களும் பீதியடைந்து கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றன.

விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்களின் போராட்டங்களைத் தணித்து, அதற்கு வடிகால் வெட்டும் வகையில் ஏகாதிபத்தியவாதிகளும் ஆளும் வர்க்கங்களும் பொதுத்தேர்தலை அறிவித்த போதிலும்கூட, விவசாயிகளின் போராட்டம் ஓயவில்லை. அரசியல் சீர்திருத்தம், நிலச் சீர்திருத்தம், விவசாயிகளுக்கு கூடுதல் நிவாரணம், விலைவாசிக் குறைப்பு என வாய்பந்தல் போட்ட ஓட்டுக்கட்சிகளையோ, மதவாத அமைப்புகளையோ, அரசியலுக்கு அப்பாற்பட்டதாக நடுநிலை நாடகமாடும் இராணுவத்தையோ நம்பி இனியும் ஏமாற விவசாயிகள் தயாராக இல்லை. தேர்தலில் நின்று, வெற்றி பெற்று, சட்டம் போட்டு விவசாயிகளின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தி விடலாம் என்று கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து பிடிக்க முயலும் முட்டாள்களாகவும் அவர்கள் இல்லை. விவசாய சங்கங்களை நிறுவி, விவசாயிகளின் போராட்டத்தின் மூலம் ஆளும் வர்க்கங்களை வீழ்த்தி, கீழிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றும் புரட்சிகரமான பாதையை அவர்கள் அனுபவ ரீதியாக உணர்ந்து செயல்படுத்தக் கிளம்பியுள்ளார்கள்.

**இந்தோனேஷிய விவசாயிகளின் போராட்டம், நாளை புரட்சிகர கம்யூனிஸ்டுக் கட்சியால் தலைமை தாங்கப்பட்டு வழி நடத்தப்படும் போது, அது தென்கிழக்காசியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிப் புயலாக மாறும் என்பதில் ஐயமில்லை.**

இதுதான் இந்தியாவில் முப்பதாண்டுகளுக்கு முன்பாக நக்சல்பாரி எழுச்சி தோற்றுவித்த புரட்சிகரமான பாதை. உழுபவனுக்கே நிலம் சொந்தம்; உழைப்பவருக்கே அதிகாரம் என்ற முழக்கத்துடன் இறால் பண்ணை அழிப்புப் போராட்டம், தேக்குப் பண்ணை அழிப்புப் போராட்டம் என்று பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கு எதிராகத் தொடர்ந்து முன்னேறும் விவசாயிகளின் விடுதலைக்கான பாதை. இன்று தன்னெழுச்சியான முறையில் நடக்கும் இந்தோனேஷிய விவசாயிகளின் போராட்டம், நாளை புரட்சிகர கம்யூனிஸ்டுக் கட்சியால் தலைமை தாங்கப்பட்டு வழி நடத்தப்படும் போது, அது தென்கிழக்காசியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிப் புயலாக மாறும் என்பதில் ஐயமில்லை.

**• பாலன்.**




# வாசகர் கடிதம்

• காஷ்மீரை இந்தியாவின் ஒரு மாநிலமாக மக்கள் கருதுகின்றனர். காஷ்மீரை பாகிஸ்தான் கைப்பற்ற முயற்சிப்பதால், இந்தியா நடத்திவரும் கார்கில் போரை ஆதரிக்க வேண்டுமென அறிவுத் துறையினர்கூடக் கருதுகின்றனர். எனவே, காஷ்மீரின் வரலாற்றை - இந்தியாவும் பாகிஸ்தானும் ஆக்கிரமித்துக் கொண்டு, அம்மக்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கி வருவதை, குறுகிய தேசிய வெறி - போர் வெறியைத் தூண்டி வருவதைத் திரைகிழித்து எழுதக் கோருகிறோம்.

''கோயில் நிலங்கள் யாருக்குச் சொந்தம்?'' - சரியான நேரத்தில் வந்த அருமையான கட்டுரை. ஆயினும், கட்டுரையின் மொழிநடை கோட்பாட்டுரீதியில் உள்ளது. எளிய மொழி நடையைப் பயன்படுத்த முயற்சிக்கவும். ''உலகைக் கலக்கும் உண்மைகள்'' போன்ற . பன்னாட்டு தொழிற் கழகங்களின் பூதாகர வளர்ச்சி மற்றும் ஆதிக்கம் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டும்.

பொதுவாக, கடந்த கால இதழ்களில் வெளியான வரலாற்று உண்மைகள், பழைய அரசியல் பாரம்பரியங்களின் பித்தலாட்டங்களை நிகழ்காலத் தலைமுறைக்குத் தெரிவிக்கும் கட்டுரைகள், நடுப்பக்கத்தில் படக்கட்டுரை முதலான வீச்சான பகுதிகள் தற்போதைய இதழ்களில் வருவதில்லை. இவற்றைத் தொடருமாறு கோருகிறோம்.

**வாசகர் வட்டம், சென்னை.**

• எரியும் பிரச்சினையான கார்கில் போர் பற்றி எடுப்பாக தலையங்கம் அமைந்தது மிக அருமை. இத்தலையங்கத்தை அப்படியே துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு மக்களிடம் பிரச்சாரம் செய்தோம். கோயில் நிலங்கள் யாருக்குச் சொந்தம் என்ற கட்டுரை தகுந்த புள்ளி விபரங்களைக் கொண்டதாக, போலி கம்யூனிஸ்டுகளைத் திரைகிழிப்பதாக அமைந்துள்ளது. கொள்கை - இலட்சியமெல்லாம் முக்கியமில்லை; கட்சி - இயக்கம்தான் முக்கியமென்று பெரியாரும் அண்ணாவும் சந்தர்ப்பவாதத்தில் சீரழிந்து, அதன் பரிணாம வளர்ச்சியாகத் திராவிடக் கட்சிகள் மதவாதத்தில் சங்கமமாகி விட்டதையும், போலி கம்யூனிஸ்டுகள் அண்ணாயிச - அம்மாயிசக் கட்சிகளாகச் சீரழிந்துள்ளதையும் ஒப்பிட்டு இதுதான் இன்றைய இந்தியா பகுதியில் அம்பலப்படுத்தியிருப்பது மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

**புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, ஈரோடு - பள்ளிப்பாளையம்.**

• இந்தியாவை மறுகாலனியாக்கி வரும் இந்து மதவெறியர்களிடம் பதவிக்காகச் சரணடைந்துள்ள கருணாநிதியின் துரோகத்தனத்தை அட்டைப்படம் எடுப்பாக அம்பலப்படுத்தியது. சிட்டி யூனியன் வங்கியின் கஜானாவைச் சூறையாடி வரும் வெங்கட்ராமன் - கோ.சி. மணி - மூப்பனார் கும்பலை மக்களுக்கு அடையாளம் காட்டியது சிறப்பானது.

**கே.எஸ். ராஜா, அம்மையப்பன்.**

• சோனியா வெளிநாட்டவரா? என்ற பிரச்சினையில்தங்களையும் அறியாமல் இந்துத்துவ பஜனை பாடும் செந்தில்நாதனையும் பெரியார்தாசனையும் அம்பலப்படுத்தியது அருமை. போலி கம்யூனிஸ்டுகளின் வாதங்களைத் திரைகிழித்து, நட்ட ஈடின்றி கோயில் நிலங்களைப் பறிமுதல் செய்து குத்தகை விவசாயிகளிடம் விநியோகிக்க - அப்பணியை கிராம மக்கள் கமிட்டிகளே செய்ய வேண்டியதன் அவசியத்தைத் தெளிவாக எடுத்து வைத்ததும், சங்கராச்சாரியை சேறு மிதித்துக் கோயிலுக்கு சொத்து சேர்த்துக் கொள்ளச் சொன்னதும் வாசகர்களிடம் வரவேற்பைப் பெற்றது.

புதிய வாசகர்களுக்கு எளிதில் புரியும் வகையில் கருத்துப் படங்கள், கேலிச் சித்திரங்கள் முதலானவற்றுடன் துணுக்குச் செய்திகளையும் கொண்டதாக இதழை மேம்படுத்தி வெளியிடக் கோருகிறோம்.

**வாசகர் வட்டம், திருச்சி.**



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## இந்து மதவெறியர்களின் பரந்த மனது

மகாராஷ்டிரா மாநிலத்தின் தானே மாவட்டத்தைச் சேர்ந்த ஜவஹர் மற்றும் மோகாதா பகுதிகளைச் சுற்றியுள்ள கிராமங்களில் பழங்குடி இன மக்கள் நிறைந்து வாழ்கின்றனர் 1992-இல் இப்பழங்குடி இனத்தைச் சேர்ந்த 150 குழந்தைகள், சத்தான உணவு இல்லாமல், நோய்வாய்ப்பட்டு இறந்து போயின. 1998-இல் கிட்டதட்ட 1610 குழந்தைகள், நோஞ்சானாகி, உயிருக்குப் போராடுவது கண்டறியப்பட்டது. இக்குழந்தைகளுக்கு இலவசமாக சத்தான உணவு கொடுப்பதற்கு, ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு மூன்று ரூபாய்(!) என பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது பற்றாக்குறையைக் காட்டி, இந்து மதவெறி ஆட்சி, மூன்று ரூபாயை ரூ. 1.80 ஆகக் குறைத்துவிட்டது. சாகக் கிடக்கும் குழந்தைகளின் வயிற்றில் அடித்தால்தான் பற்றாக்குறையை ஈடுகட்ட முடியுமா?

## காதலும் சாதிக் கட்டுமானமும்

உத்திரபிரதேசத்தில் கான்பூர் நகருக்கு அருகில் உள்ள கப்ராஹா கிராமத்தைச் சேர்ந்த சுரேந்திரா, தாழ்த்தப்பட்டவர். சுரேந்திராவும், யாதவ் சாதியைச் சேர்ந்த சுரேந்திராவின் காதலி ராதாவும், சாதிக் கட்டுப்பாடுகளை மீறி திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து, ஜூன் 29 அன்று வீட்டை விட்டு வெளியேறிவிட்டனர். இந்த 'அவமானத்திற்கு'ப் பழிவாங்கத் துடித்த ராதாவின் உறவினர்கள், சுரேந்திராவின் தாயையும், தந்தையையும், இரு சகோதரர்களையும் பிணையக் கைதிகளாகப் பிடித்துச் சென்று, தொடர்ந்து எட்டு நாட்களாகச் சித்திரவதை செய்தனர். அதன் பின்னும் ஆத்திரம் தணியாத அம்மேல்சாதிவெறிக் கும்பல், சுரேந்திராவின் தாயைக் கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தி, நிர்வாணமாக கிராமத் தெருக்களில் இழுத்துச் சென்று, கிராம மக்களின் கண் முன்னாலேயே உயிரோடு கொளுத்தி விட்டனர். இம்மேல்சாதிவெறித் தாக்குதல் போலீசாருக்கு நன்கு தெரிந்தே நடந்துள்ளது. இத்தாக்குதல் பற்றி ஜூலை 5-இல் வழக்குப் பதிவான பின்னும், குற்றவாளிகளுள் ஒருவன் கூட கைது செய்யப்படவில்லை.

## தாராளமயத் தாசர்களின் காதில் ஏறுமா?

திருச்சியில் அமைந்துள்ள பொதுத்துறை நிறுவனமான பாரத மிகுமின் நிலைய நிறுவனம் தயாரிக்கும் கொதிகலன்களுக்குத் தேவைப்படும் பாகங்களை ஒப்பந்த அடிப்படையில் செய்து தரும் 200 சிறுதொழில் நிறுவனங்களை மூடிவிடக் கூடிய அபாயம் எழுந்துள்ளது. இந்நிறுவனங்கள் மூடப்பட்டால் ஏறத்தாழ 30,000 தொழிலாளர்களின் வாழ்க்கையே பறிபோய்விடும். ஒரிஸ்ஸாவில் அமைந்துள்ள தால்சர் மின் நிலையத்தை விரிவாக்குவதற்குத் தேவைப்படும் கொதிகலன்களை வாங்க, ''ஏ.பி.பி.'' என்ற பன்னாட்டு நிறுவனத்திடம் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. தேசிய அனல் மின் கழகம் இந்த ஒப்பந்தத்தைத் திரும்பப் பெற்று, பாரத மிகு மின்நிலைய நிறுவனத்திடம் ஒப்படைத்தால், 200 சிறு தொழில் நிறுவனங்கள் மூடக்கூடிய அபாயத்தைத் தடுத்துவிடலாம் என்று சிறு தொழில் அதிபர்கள் சங்கம் கோரியுள்ளது. திருச்சி எம்.பி. தொகுதியை வென்று, எரிசக்தித் துறை அமைச்சராகப் பவனி வரும் குமாரமங்கலத்தின் காதில் இது ஏறுமா?

**சத்தான உணவுக்கு வழியின்றி நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் அஜய்**



## தமிழர்களின் சுயமரியாதைக்குச் சவால் விடும் பா.ஜ.க.

பார்ப்பன மதவெறி பாசிஸ்டுகளான ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல், ஈரோடு மாவட்டம் - கோபி வட்டத்திலுள்ள தாசப்பக் கவுண்டன்புதூரில், ''ஜூன் 27 மாலை 3.00 மணிக்கு பெரியார் படத்துக்கு செருப்பு மாலை அணிவித்து ஊர்வலம் நடைபெறும்!'' என பத்துக்கும் மேற்பட்ட சுவர்களில் எழுதி வைத்துள்ளனர். தமிழக மக்களால் தீண்டப்படாமல் கிடந்த இம்மதவெறிக் கும்பலுக்கு, திராவிடக் கட்சிகள் அரசியல் அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டன. அந்தத் துணிவில்தான், பெரியாரை இழிவுபடுத்துவதன் மூலம் தமிழர்களின் சுயமரியாதையையும் சீண்டி பார்க்கக் கிளம்பியுள்ளன. இச்சுவரெழுத்தை அழிக்கவும், அம்மதவெறிக் கும்பல் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரி புகார் மனு கொடுத்து பின்னும், பெரியாரின் சீடர் மு.க.வின் கீழ் இயங்கும் தமிழகப் போலீசு அசைந்து கொடுக்கவில்லை.

## பட்டினிச் சாவின் பிடியில் மக்கள் உல்லாச மிதப்பில் அமைச்சர்கள்

ஒரிஸ்ஸாவின் தென்மேற்கே அமைந்துள்ள காலகந்தி உள்ளிட்ட ஆறு மாவட்டங்களில் வறட்சியும், பட்டினிச் சாவுகளும் நிரந்தரமாகிவிட்டன. கூடுதலாக நிதி ஒதுக்கி இப்பட்டினிச் சாவுகளைத் தடுத்து நிறுத்த தயாராக இல்லாத அம்மாநில அமைச்சர்களும், அதிகாரிகளும் தங்களின் சுகபோகத்திற்காக மக்களின் வரிப் பணத்தை ஊதாரித்தனமாக வாரியிறைத்து வருகின்றனர். கடந்த நான்கு ஆண்டுகளில் அம்மாநில அமைச்சர்களின் சுற்றுலா பிரயாணத்திற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 1.2 கோடி ரூபாய். மாநில முதல்வர் கிரிதர் கோமங் தனது பங்களாவைப் புதுப்பிக்க இருபது இலட்ச ரூபாயும், சோஃபாக்களும், தரைவிரிப்புகளும் வாங்குவதற்கு பதினைந்து இலட்ச ரூபாயும் செலவழித்துள்ளார். அமைச்சர்களின் பங்களாக்களைப் புதுப்பிக்க 1.5 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. இது தவிர, பெரும்பாலான அமைச்சர்களுக்கு குளுகுளு வசதி செய்யப்பட்ட மாருதி கார் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது!

## 'தேசிய' பத்திரிகைகளின் அறிவு நாணயம்

இந்திய இராணுவம் தீவிரவாதிகளைத் தேடுவது என்ற பெயரில், காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள பந்திபுர், கார்கம், நாத்போரா என்ற மூன்று கிராமங்களைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டது. இந்த அட்டூழியம் பற்றி தெரிந்திருந்தும், எந்தவொரு 'தேசிய'ப் பத்திரிகையும் அதனை அம்பலப்படுத்தி எழுத முன்வரவில்லை. கார்கிலில் சண்டை நடந்து கொண்டிருக்கையில் இதைப்பற்றி எழுதினால், போரிட்டுக் கொண்டிருக்கும் இராணுவ வீரர்களின் மன உறுதி குலைந்து போகும் என்று கூறி, இந்த அட்டூழியத்தை மூடிமறைத்து விட்டன.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/MS(S) 622 / 99

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



கார்கில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, ''இந்தச் சண்டை ஒரு முழுமையான போராக வெடிக்குமானால், இந்தியா தான் வெற்றி பெறும். ஏனென்றால், பாகிஸ்தானைவிட இந்தியா தான் பொருளாதார வலிமை மிகுந்த நாடு'' என்ற பிரச்சாரம் முடுக்கி விடப்பட்டது. பீற்றிக் கொள்ளப் பட்ட அந்தப் பொருளாதார வலிமையின் உண்மை முகத்தை நாமும் தெரிந்து கொள்வோமா?

இதோ, இந்தச் சிறுமி தனது குடும்ப பாரத்தைச் சுமப்பதற்காக, பெங்களூர் நகர வீதிகளில் தினந் தோறும் பாம்பை விழுங்கி வித்தை காட்டிக் கொண்டிருக்கிறாள். இந்தச் சிறுவர்கள், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியைச் சுற்றிப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகள் வீசி யெறியும் ஒரு ரூபாய் காசுக்காக, 60 அடி உயரத்தில் இருந்து நீரில் குதித்து 'சாகசம்' செய்து காட்டுகிறார்கள்.

உயிருள்ள பாம்பை தினந்தோறும் விழுங்கி விழுங்கி, தொண்டை தொடங்கி வயிறு முடிய எல்லாம் புண்ணாகிப் போன பின்னும் கூட, அந்தச் சிறுமி இந்தப் பொழப்பை விட்டு விடவில்லை. மேலேயிருந்து குதிக்கும் பொழுது தப்பித் தவறி பாறையில் அடிபட்டால், சிறுவர்களின் உயிரற்ற உடல்தான் தண்ணீரில் மிதக்கும். இருந்தாலும், அந்தச் சிறுவர்கள் தினந்தோறும் உயிரைப் பணயம் வைக்கிறார்கள்.


தீப்பெட்டி தொழிற்சாலைகளிலும், உணவு விடுதிகளிலும், மெக்கானிக் ஷெட்டுகளிலும் அமைப்பு ரீதியாகச் சுரண்டப்படும் இலட்சக்கணக்கான குழந்தைத் தொழிலாளர்கள் ஒருபுறமிருக்க, இப்படி வித்தை காட்டுவது, நகரத் தெருக்களில் குப்பை பொறுக்குவது, நெடுந்தொலைவு செல்லும் இரயில் வண்டிகளில் பெட்டிகளைச் சுத்தம் செய்வது என முறைசாராத் தொழில்களில் ஈடுபட்டு, வாழ்க்கையை ஓட்டும் குழந்தைத் தொழிலாளர்களையும் கொண்டதுதான் நமது நாடு.

காசுமீரில், கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு அருகிலுள்ள, புல்பூண்டு கூட முளைக்க இலாயக்கற்ற சியாசின் பகுதியைத் தக்க வைத்துக் கொள்ள மைய அரசு நாளொன்றுக்கு 4 கோடி ரூபாய் செலவு செய்கிறது. கார்கில் சண்டையில் கரியாகிப் போன தொகை 10,000 கோடி ரூபாய். பட்ஜெட்டில் பற்றாக்குறையே விழுந்தாலும், 'தேசப் பாதுகாப்பு'க்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை அள்ளி விடும் ஆட்சியாளர்கள், குழந்தைத் தொழிலாளர் சுரண்டலை ஒழித்து, அவர்களின் மறுவாழ்வுக்கு உதவுவது எனும் பொழுது, வெறுங் கையை அல்லவா காட்டுகிறார்கள்!

கோடிக்கணக்கான இந்தியக் குழந்தை தொழிலாளர்களின் மறுவாழ்வுக்குப் பயன்படாத, அதேபொழுதில் பாகிஸ்தானுடன் மோதுவதற்குப் பயன்படுத்தப் படும் இந்தப் பொருளாதார வலிமை குறித்துப் பீற்றிக் கொள்வது அருவெறுக்கத்தக்கதாகாதா? முளையிலேயே கருகிப் போன இவர்களின் வாழ்க்கையில், இராணுவம் கொண்டு பாதுகாப்பதற்கு என்ன மிஞ்சியிருக்கிறது?

இவர்களின் வாழ்க்கையை முளையிலேயே கருக்கியது யார்? அண்டை நாட்டு பாகிஸ்தான்காரனா?

அதிகாரமும் செல்வாக்கும் கொண்ட இந்தியனா?
''கார்கில் தேச பக்தர்களே'', சற்றே சிந்தியுங்கள்!



படிப்பகம்